உ

# தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத்

திங்கள் வெளியீடு.

துணர் ௰௪. { வெகுதானிய, ஆவணி } மலர் ரு


| | | |
|---|---|---|
| க. | இரண்டாவது சர்க்கரைப் புலவர்<br>*சர்க்கரை. இராமசாமிப் புலவர் அவர்கள்* | 161 |
| உ. | முதலாம் இராசராசன் அமைத்த திருக்கோயில்<br>*திரு. ஜே. எம். சோமசுந்தரம் பிள்ளை அவர்கள்* | 176 |
| ௩. | கல்விபற்றிய குறிப்புகள்<br>*திரு. சர். மிர்சா. இசுமேல் அவர்கள்* | 184 |
| ௪. | கச்சியப்பரும் கம்பரும்<br>*திரு. கவிராஜபண்டிதர், ரா. திம்மப்பஜயர் அவர்கள்* | 191 |
| ரு. | யசோதர காவியம்—புத்துரை<br>*திரு. வே. மு. ஸ்ரீநிவாஸ முதலியார் அவர்கள்* | 197 |
| சு. | புத்தக மதிப்புரை<br>*பொழிற்றொண்டர்* | 201 |


*செந்தமிழ்ப்புரவலர், தமிழவேள்,*

த. வே. உமாமகேசுவரம் பிள்ளை, பொழிற்றொண்டர்.

*கூட்டுறவுப் பதிப்பகம், கரந்தை, தஞ்சாவூர்.*

உ

# தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

| துணர் ௰௪ | வெகுதானிய, ஆவணி | மலர் ௫ |
|---|---|---|

இரண்டாவது

## சர்க்கரைப்புலவர்

சர்க்கரை. இராமசாமிப் புலவர் அவர்கள்

இவர் பாண்டிவளநாட்டில் இராமநாதபுர சமஸ்தானம் சிறுகம்பையூரில், பொன்னெட்டிமாலைச் சர்க்கரைப்புலவரின் திருக்குமாரரான சீனிப்புலவரின் புதல்வர். இவர் பாட்டனாரிடத்தும், பிதாவினிடத்தும், இலக்கிய விலக்கணங்களைப் பயின்றார். குலவித்தை கல்லாமற் பாகம் பெறுமன்றோ? தியாகராஜ தேசிகரென்கின்றவரிடமும் பயின்று இயற்கையிலேயே சீரிய அறிவுடையவராக விளங்கினர். இருபது வயது நிரம்புமுன்னரே கலைவளர்ச்சி முதிரப்பெற்று இனிமையும் பொருட்சிறப்பும் ஒன்ற நாற்கவிகளையும் விரைவிற் பாடுந் திறமையடைந்தார்.

இராமாயண முதலிய விதிகாச புராண மாதிய நூல்களை வாசாமகோசரமாக அவை மெச்சப்பேசும்ஆற்றலும்பெற்றார். மேலும் இவர் சிவபூஜா துரந்தாராகவும் வழிபடு கடவுளாகிய முருகப் பெருமானிடத்துப் பேரன்புடையவராகவுமிருந்தார். எவ்வாற்றானும், பொன்னெட்டிமாலைச் சர்க்கரைப் புலவரினும் விஞ்சிய புகழ்பெற்றுப் பற்பலவரசர்களாலும், செல்வர்களாலும் போற்றப்பட்டவரென்பது பின்வருமாற்றால் நன்கு அறியலாகும்.

இராமநாதபுரம் சமஸ்தானம் இவர் காலத்துப் பல சமஸ்தானங்களாகப் பிரிந்தமையின், சர்க்கரைப்புலவர், இராமநாதபுரம் சமஸ்தான வித்துவானாகவிருந்ததுமன்றி, சிவகெங்கை சமஸ்தான வித்துவானாகவும்விளங்கினார். பட்டயவாயிலானும் பிறவாற்றானும் பாட்டனார் ஈட்டிய கிராமங்களையும் செல்வங்களையும் ஆண்டநுபவிக்கும் பேறு இவரதாகவே யிருந்தது.

இவர் பலநூல்களும் தனிப்பாடல்களும் இயற்றியும் பிரசங்கங்களாற்றியும் பரிசில்கள் பல பெற்றிருக்கின்றனர். அவற்றுட் சிலவற்றை ஈண்டு எடுத்துக் கூறுவாம்.

இராமாயணப் பிரசங்கத்தின் பொருட்டுத் திருவாடானை ஆதிரெத்னேசுவரர் கோவிலில் வைத்து............சேதுபதியின் காரிய கர்த்தரான ரெங்கோஜியப்பா அவர்கள் காரியம் ரெங்கநாத முதலியார் முன்பு, சேது சமஸ்தான வடக்கு வட்டகையின் ஐந்து தாலுக்காவிலுள்ள எல்லாக்கிராமங்களினும் நன்செய் புன்செய் விளைநிலத்திற்கு மகமை மாத்தாக் குறுணி விகிதம் சந்திராதித்தருள்ளவரை அரசர்க்குங் குடிகளுக்கும் பொதுவில் கொடுப்பதாக அஞ்சுகோட்டை முதலிய நாட்டுப் பிரபுக்களால் பட்டயமொன்று சர்க்கரைப் புலவருக்குக் கொடுக்கப்பெற்றுள்ளது. இப்பட்டயம் சாலிவாகன சகாப்தம் ௲௬௱௭௰௫ மேற்செல்லாநின்ற விபவ வருஷம் சித்திரைமீ ௨௨ கி.பி. 1753-ல் பிறந்தது ” என்ற குறிப்பால் அஞ்சுகோட்டை மாகாணத்தில் இவருக்கு, மகமை ஏற்படுத்தி வழங்கியிருக்கிறார்களென்பது அறியலாகும்.

சாலிவாகன சகாப்தம் (௲௭௱, கி. பி. 1778)ல் முத்து விஜய ரகுநாதத்தேவர் என்னுஞ் சேதுபதிகளால் பட்டயவாயிலாகத் திருவாடானைக்குப் பாங்கருள்ள ஓர் கிராமம் இவருக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றது. அப்பட்டயம் மிகப்

பழமையாய்ச் சிதைந்துவிட்டமையால் கிராமப்பெயர் இன்ன தென விளங்கவில்லை. எனினும் பட்டயமுளதாகலின் கிராமங் கொடுக்கப்பட்ட தென்பதில் ஐயமில்லை.

மற்றும், சிவகெங்கை சமஸ்தானுதிபதியாகிய சசிவர்ண பெரியவுடையாத்தேவர் இப்புலவர் பெருந்தகை கம்பராமா யணப் பிரசங்கம் ஆற்றியதற்குப் பரிசாக தேளியூர் என்னுங் கிராமத்தை முற்றூட்டாகக் கொடுத்திருந்தனர். இக்கிராமம் குறைந்த விளைவும், எரியின்மையுங் கண்டு வருந்தி அச்சமஸ் தான முதன்மந்திரி தாண்டவராயபிள்ளை மீது.

நஞ்சைபுஞ்சை விளைவுநிலம் நாலுபத்துக் நலந்தேளி
நாலெட் டாண்டாய்
பஞ்சைவிளை வாகுமதிற் கண்வாயு மில்லையதிற்
பாதி தந்தாய்
அஞ்சுபுல வோர் நரங்க ளடுத்தசன மைம்பதுபே
ராற்று தையா
தஞ்சமென்றே ரைப்புரக்கு முல்லைத்தாண்
டவராயத் தருமவானே.

என்னுங் கவியைப் பாடினர். தாண்டவராயபிள்ளை தம் மன் னராகிய சசிவர்ண பெரிய வுடையாத் தேவரின் திருக்குமாரர் முத்துவடுகநாத தேவருக் கிதனையறிவித்துத் தேளியூருக் குப் பதிலாக ஆச்சான்குளம் என்னும் விளை நிலவூரை விடச் செய்து அங்ஙனம் விட்டமைக்கோர் நிருபமும் கொடுப்பித் தனர். இச்செய்தி.

''சூழியணி தும்பிமுன்னே தோன்றியமால் சிவகெங்கைத்
[துரைத் தனந்தான்
ஊழியுல குள்ளவரைத் தானரசு செய் பெரிய வுடையாத்தேவர்
தேளியூர்க் கேபதிலாச் சான்குளம்விக்ரமவருடந் திருநிருபம்
ஆழிதனி லமிர்தமெடுத் தேபுலவர்க் கிந்ததென வருள்செய்
[தானே''

என்ற விப்புலவர் பெருமானின் கவியால் நன்கு அறியலாகும்.

பின்னுமோர்முறை, இப்புலவர் பெருந்தகை சசிவர்ணப் பெரியவுடையாத் தேவர் திருமுன்னர் பிரசங்கமாற்றியதற்குப் பரிசாக மருதன்குடி என்னுங் கிராமத்தில் நாற்பது செய்யும் காடாவயல் என்னுங்கிராமத்தில் முப்பது செய்யும் பெற்றனர் என்று ஓர் நிருபத்தாலும் பாடலொன்றாலும் அறியலாகும்.

அங்நிருபம் வருமாறு :—

"சிவகெங்கைச்சீமை உருவாட்டித்தாலுக்கா ஆத்திக்குடி மாகாணம் ஒட்டக்காரமருதன்குடிக்கிராமத்தில் சர்க்கரைப்புலவர் பிரசங்கத்துக்குமுன் குரோதி௵ புரட்டாசி௴ ௧௮௨ சசிவர்ண பெரியவுடையாத் தேவரவர்களால் விடப்பட்ட செய்களுக்கு நான்கெல்லை ;

கல்லுக்கு மேற்கு, அஞ்சாமட்டி கொடுமணியேந்தலுக்கு வடக்கு, கீழ்மருங்கூருக்குங்கிழக்கு, முடித்தானைக்குத்தெற்கு இதற்குட்பட்ட விரையடி ௯௰௨.௱ யீசாபாகம் வி.டி. ௧௰௪.௱ னால் விளைவு வீடி, அ௰௪.௱ விளைவுக்கு யோக்கியமான தரிசு, வீ. டி. ௰௨ ள்ளுள் யீசாபாகம் அ௰௪௭, நீர்நிலை உ௰ள நத்தம் குழி ௧ திருவிருப்புக்கு உ, விளைவுக்கு ௧௰௨ சுத்தப்பொட்டலுக்கு ௧௰ சராசரி வருமானம் நெல் ௱. ௧௰. ௱. ரொக்க வருவாய்க்கு ௨௱௨௰ள பொறுப்புவரி உ௰௨ பத்து கவப௮ பணம், ரூ ௧௰௫".

"மருதன் குடிகளு லீரைந்து செய்சர்வ மானிய கிராம
மென்றும்
மன்னுகா டாவயலி லாறைந்து செய்விளைவு
வரிகொடுக்குங் கிராமங்
கருதுவிரை யடியறுப தின்கலம தாமதிற் கண்வாயை
யுண்டுபண்ணக்
கனசெலவு செயினுமய லூர்க்குடிக ளுழவுடன்
கலந்திடுஞ் சொந்தவுழவும்
பெரிதுபயி ரிடினுமொரு மாவிருப துக்குமேற் பொலிகண்ட
தில்லை பின்னும்
பெரும்பாதை போகவர வறிவரை யாவுனது பிரியமுள
பரிசனர்களும்
ஒருவருடம் விளைகிலோ மறுவருடம் விளைவில்லை யுன்சித்த
மென்பாக்கியம்
உயர் விசய ரகுநாத கவுரிவல்லப தேவவுடையா
நரேந்த்ர துரையே"

யென்று நம்புலவர் பெருந்தகை பாடிய பாடலுக்காகச் சசிவர்ண பெரியவுடையாத் தேவர் ஆயிரம் பொன் அளித்ததுடன் போதுமான பயிரிடுங் குடிகளை அக்கிராமங்களிற்

குடியேறும்படி செய்து சிவகெங்கைச் சமஸ்தானத்தில் பல தாலுகாக் கிராமங்களில் மகமையும் ஏற்படுத்தியுள்ளார் என்ப.

தஞ்சாவூரை 1735 முதல் 1765 வரை யாட்சி புரிந்த பிரதாபசிங்கு மகாராஜர் புலவர் பெருமான் பிரசங்கம் ஆற்றும் வன்மையையும் கல்வித்திறனையும் பாராட்டிமீன்புசல் எனவழங்கும் இராஜகுமாராம்பாள்புரஞ் சத்திரங்கிராமங்களிலும், மணமேற்குடிச் சத்திரங்கிராமங்களிலும் மகமை ஏற்படுத்தியிருக்கின்றார். இப்பொழுதும் அச்சத்திரங் கிராமங்களின் பட்டாக்களிற் சர்க்கரைப்புலவர் பெயர் இன்றும் இருக்கக்காணலாம். இந்த மகமையை இப்போதும் யாம் பெற்றுவருகிறோம். இஃது.

“தருதஞ்சை வாழும் ப்ரதாபசிங் கேந்த்ர தருமன் மெச்சும்
வருமணி மாமுத் திரைவேங்க டாசல மால் சம்ப்ரதி
நரதுங்க பாலக மாணிக்க வேள்சபை நாளையிலே
உரைசெய் மிழலைச் சதகத்தைச் சர்க்கரை யோதினனே.”

என்னுஞ் செய்யுளால் நன்கு புலனாகின்றது.

ஓர்நாள் அரசர்குளம் (பாலையவனம்) வணங்காமுடியார் முன்னிலையில் வெண்பாப்புலிப்புலவர் முதலிய கவியரசர்களும், பெருஞ் செல்வர்களும் குழுமிய பேரவைக்கண் புலவர் பெருந்தகை, இராமாயணப் பிரசங்கம், புரிந்தார். அப்பிரசங்கம், கேட்டவர் புலனையெல்லாங் கவர்ந்து பரவசப்படுத்தினமையின் புலவரை வணங்காமுடியாரும் அவையோரும் வாயாரப்புகழ்ந்தனர். சிறந்த வித்துவான்களிலொருவரெனத் தக்கோரால் நன்கு மதிக்கப் பெற்ற, நாவன்மையுடையவரும் சீகாழியில் வதிந்தவருமாகிய வடுகநாத தேசிகர், வாளாவிராது “சர்க்கரைப்புலவர்போல் யாமும் பிரசங்கிக்க வல்லேம்” எனக் கலைத்தருக்காற்கூறி எழுந்து பிரசங்கம் செய்தார். இவர் பிரசங்கம், சர்க்கரைப்புலவர் பிரசங்கத்துக்குச் சிறிதும் இணையாகாமையைக் கண்ட அருகிலிருந்த வெண்பாப்புலிப்புலவர்,

“சர்க்கரைமஞ் ஞைக்கிணையாய்த் தான்வடுக நாதனெனுங்
குக்குடமுங் கூடநடங்கொண்டதோ—தொக்க
இணங்கார் முடியை யிடறுகின்ற வெற்றி
வணங்கா முடிசபையில் வந்து.”

என்னும் வெண்பாவைப் பாடினர், இப்பாடலேயன்றி இப் புலவர் பெருமான் நாவன்மையை யளக்க வேறு சான்றும் வேண்டுமோ?

சர்க்கரைப்புலவரியற்றிய நூல்கள்

1. நக்ஷத்திரமாலை.
2. தாண்டவராயபிள்ளைமீது கோவை.
3. புதுக்கோட்டை விஜய ரெகுநாத தொண்டைமான் மீது வண்ணம்.
4. தக்ஷிணமூர்த்தி மும்மணிக்கோவை.
5. அரசர்குளம், வணங்காமுடியார்மீது வண்ணம்.
6. திருவாடானை ஆதிரெத்தினேசுவரர்மீது சித்திர கவி யலங்காரம் முதலியன.

இந்நூல்கள் இவரியற்றினரென்பதற்கு ஒவ்வொன்றினின்றும் இரண்டு செய்யுட்கள் காட்டுவாம்.

இப்புலவர் பெருமான் சிங்கவனம் ஜமீன்தார் மெய்க்கன் கோபாலரிடம் ஏழேருமாடுகள்வேண்டுமென்றெழுதிய சீட்டுக் கவி யவர்மீது நக்ஷத்திரமாலை பாடியதைக் குறிக்கின்றது.

"சம்பிரமவசீகரா, தயவுளதுரந்தரா, சற்புருடரத்னதுய்யா,
சவுமியதுரந்தரா, வெகுஜனவிரட்சகா, தயாகுண நிறைந்த
சமுகா
தருபாம்பை நகரில் வளர் மெய்க்க மகராஜனே! தமிழுக்கு
மகிழ் சீலனே!
சர்க்கரைக் கவிராஜன் யானுகையானீயுந் தயவுள்ளதுரை
யாகையால்,
கொம்புசாணுள்ளதா, யேழுசாணீளமாய்க் குளம்படியில்
வால் வீழ்வதாய்க்
குதிரையடி வைப்பதாய்க் குணமது படைத்ததாய்க்
கூறுமயிலைப் புறமதாய்க்
கூறுநெஞ் சுரமொடு காலுறுதி யுள்ளதாய்க் குளமதிற்
சுட்டியுளதாய்க்
கோலமுளதாடைகனவாத்தாய்ச் சுழிநலங்கொண்டவிருபற்
போட்டதாய்க்
கம்படிபடாததா யோங்குமுனடப்பதாய்க் கட்டுதுறை
நக்காததாய்க்
கன்னியர் பிடிப்பதாய் மனைதனி லிருப்பதாய்க் கதிர்பயிர்கள்
தின்னுததாய்க்

கனமாய்ப் பருத்திவிரை தவிடு தண்ணீர் கலங்கலக்கிக்
குடித்திடுவதாய்ச்
கண்டவர் சபா சென்று மெச்சி யுன் பேர் சொலக்
காளைமா டேழிணையதாய்ச்
செம்பதும லட்சண முகத்தினி லுதித்தாய்த் திரும்பிமனை
நோக்காததாய்த்
திறைகொண்டு புவியரசர் தினம்வந்து பணிகழற் சேதுபதி
மெச்சு சிங்கைச்
செகராஜ மகராஜ மெய்க்க மகிபாலனுஞ் சிங்கங் கொடுத்த
தென்றே
தேசமெல்லாஞ் சொல்ல ஏழேரு மாடு நீ சீக்கிரமனுப்பு
வாயே.''

"எதிரிடு தமிழ்ப் புலவர் விருதினை நொறுக்கியவ
ரிருகாதறுத்து நூறி
இலக்கண விலக்கியக் கடல்கொண்டு மோதியே யிகல்
வெற்றி கொண்ட சிங்கம்
கதிரவகுலாதிபதி சேதுபதி சித்தமகிழ் கணிதப் பிரபந்த
வாக்கி
கனமான முத்தமிழ்க் கதிகாரி சர்க்கரைக் கவிராஜ
ரெழுது நிருபம்
பதிகளிலுயர்ச்சிபெறு பாம்பை நகராதிபன் பரராஜ
கண்டீரவம்
பகருமொழிதவருத மகாராஜ மெய்க்கோ பாலனெதிர்
வந்து காண்க
அதிகமாய் நக்ஷத்திர மாலைக்கு நாம்சொன்ன தாகுமே
ழிணைமாடுமே
யருணு சலத்தின்வச மாகயிந்தக்கண மனுப்பிவர
விடவேண்டுமே.''

சிவகெங்கை சமஸ்தானம் முதன் மந்திரி தாண்டவராயபிள்ளைமீது
ஓர் கோவை பாடினரென்பது

"வண்ணமொரு நாழிகையிலே தூதுலாமாலை மடல் பரணி
சாமமொன்றில்
மகத்துவம் பெற வொரு பகற் பொழுதிலே கோவை
மற்றப்ரபந்தமெல்லாம்

என்னமுட னெருநொடியி லேபாட வல்லே மெழுத்து
முதலேந்து மறிவேம்
இயலிற் பிரசங்கத்தில் விருதுபெறு சர்க்கரைநல் லிசை
யுளோரெழுதுமோலே
தண்ணந்துழாய் மௌலிசசிவர்ணமதியூகி தருமுத்து வடுக
நாதத்
தளதந்த்ரி மதிமந்த்ரி யெங்கள் தாண்டவராய சற்குண
விவேகனறிய
பண்ணமைந்திடுதமிழ்க் கோவையுன் மீதினிற் பாடியமை
வுற்றதாலே
பகர்கின்ற தமிழுநின் கீர்த்தியும் விளங்கவே பக்ஷம்
வைத்தருள் புரிவையே''
என்னுமோலேத் தூக்கினுற் புலனும்.

பாப்பாநாடு இராமலிங்கவிஜயத்தேவர்மீது
மும்மணிக்கோவை பாடினுரேன்பது

"கடல்மடை திறந்தன்ன வளமட லுலாவினெடு கனசந்தமாலே
சொல்வோம்
கற்றறியிலக்கண விலக்கியத் தெதிரிட்ட கவிராஜரைத்
துறந்தோம்
படலமிகுராமாயணப் பிரசங்கத்திலே பண்பாக விருது
பெற்றோம்
பைந்தமிழறிந்தோங்கு சர்க்கரைக்கவிராஜ பனகபதி
யெழுதுமோலே
சடசடென வுலகமுறி தரவடிக ளிடுவேக தந்தாவளத்தி
லுதயன்
தருபாம்பை வருராமலிங்க விசையாத் தேவதாரு
வெதிர்வந்து காண்க
வடவரையி லுறைதுருவ னெனவாழ்க வேமும்மணிக்கோவை
சொல்லி நின்பால்
மகிமைபெறு சொல்லருமை பொருளருமை யறிவையென
வந்தன மிசைந்தாள்கவே
என்ற சீட்டுக்கவியாலறியப்படுகின்றது.

புதுக்கோட்டை விஜயரேகுநாதத் தொண்டமான்மீது
வண்ணம் பாடியதை

வெற்றி செறிபாரத விராமாயணத்திலே விருதுபெறு கவிஞர்
சிங்கம்
மிக்க தமிழாமைந்திலக்கண மெலாக் தேர்ந்து வித்தார
கவிதை சொல்வோன்
மற்ெருப்பிலாததுரை தேவை வருசேதுபதி வாசற் பிரபந்த
வாக்கி
வந்த ராமாயணச் சர்க்கரைக் கவிராஜன் வளமைபெற
வெழுதுமோலை
சொற்றகவிமாலைபுனை கோடிநகராதிபன் சுந்தரபுரந்தரகுலத்
துரைவிஜய ரகுநாதத் திருமலைத் தொண்டமான்
றுரிதமாய் வந்துகாண்க
கற்றகல் விச்சந்த வண்ணமொன் றுன்மீது கருணையொடு
சொல்லிவந்தோம்
கற்பகத் தார்புனையு மிந்திரன் போலவிக் கவிமாலை
கொண்டருள்வையே
என்ற சீட்டுக்கவி வலியுறுத்துகின்றது.

அரசர்குளம் (பாலையவனம்) ஜமீன், அருணசல
வணங்காமுடித்தொண்டமான் மீது வண்ணம் பாடியமை

*நாகபந்தக் கவிதை சக்ரகவி முதலான நலமான சித்ரகவியும்
நன்மைமிகு பாரத விராமாவதாரமு நயத்துடனறிந்த
நிபுணன்
மேகமெனவே தூதுலாமாலை மடல் பரணிவிவரமொடு சாம
மொன்றில்
மிகவேகமாய்ச் செயுஞ் சர்க்கரைக் கவிராஜ விதரணிக
னெழுதுமோலை
†கோகருணை நாதரடி மறவாத ரகுநாத குலரத்ன
மருள்பாலகன்
குறுகலர் வணங்குமருணசலத் தொண்டமான் குணமுட
னெதிர்ந்துகாண்க

† திருப்பெருந்துறை ஆத்மநாதக் கடவுள், இந்தக் கடவுளுக்குக்கால
பூசைக்கு 32 ஊர்கள் முற்றூட்டாகவளித்தவர். தாமிரசாசனமுள்து

தோகையர்கள் சேர்கலவி மகிழ்துறையிலே வணஞ்சொல்லி
வந்தோமிக்கவாஞ்
சொற்பொருளறிந் தெமதுகனமுமாராய்ந்து நீ சுகமாய்
மகிழ்ந்தருள்வையே

என்னுங்கவி நன்கு புலப்படுத்தும்.

திருவாடாஊன ஆதிரேத்னேசுவர் மீது சித்திரக்கவியலங்காரம்
பாடினரென்பது.

பஞ்சவனுகிய பாண்டியன் றேசம் பலவற்றுளே சேதுபதி
மன்சீமை
மஞ்சுலவு காவாருங் கடார, நாகை, வளரோரூர்
சிறுகம்பையூரில் வாழ்வோன்
மிஞ்சு புகழிராமாயணப்ரசங்க விருது நெட்டிமாலையுஞ்
சிவிகையும் பெற்றோன்
தஞ்ச மென்றே யாதிரெத்னேசர் பேரிற்றமிழலங்காரச்
சித்ரகவி செய்தானே

என்ற சாற்றுக்கவி சாற்றுகின்றதாற் புலனுகின்றது.

இக்கவியில் விருது நெட்டிமாலையுஞ் சிவிகையும் பெற்றோ னென்ற வாற்றால் பொன்னெட்டிமாலைச் சர்க்கரைப்புலவ ரன்றோ இவற்றைப் பெற்றவர்; ஆகலின் அவரன்றோ இச் சித்திர கவியலங்காரத்தை யியற்றியிருத்தல் வேண்டும் என்று கூறின், அற்றன்று. முன்னோர் பெற்ற பெயரும் விருதும் அவர் வழியினராம் அவர் போற் சிறந்தார் புனைந்துகோடல் வழக்கே யாகலின் அவ்வழக் குப்பற்றியே ஈண்டுக் கூறியது என விடுக்க. அக்காரணமன்றி முத்துராமலிங்கசேதுபதி நாளிலிருந்து அவராலாதரிக்கப் பெற்ற நம் சரித்திர கர்த்தா என சர்க்கரைப் புலவரே பாடினரென்பதை

“பூமேவு முத்துராமலிங்கதுரை மகிழ்ந்த மந்திரி புருஷமேரு
மாமேவு மன்மதன் முத்திருளப் பன்றனையாண்ட
மகிமையாலே
பாமேவு சித்ரகவி யாடாஊன யீசுரன்மேற் பாடினேன் யான்
றேமேவு மத்தனிஊனத்தது முடித்த கணபதிதாள்
சென்னி சேர்த்தே.”

என்ற சால்புற்ற கவியும். 2-வது சர்க்கரைப் புலவரே பாடினு ரென்பதை மெய்ப்பிக்கின்றது.

இனி, இவர் பாடிய தனிச் செய்யுட்களையுங் கிடைத்த மட்டில் எடுத்துரைப்பாம்.

முத்துவடுகநாதஉடையாத்தேவர் தந்தையும்
கவுரிவல்லபத்தேவரெனப் பெயர் கொண்டவருமான
சசிவர்ண பெரியவுடையாத்தேவர்மீது பாடியது.

மாலை மாற்று.

"வால வரிவுகரா மானுய காசருவ
மாலாகி னுள்முர வாணிலா—சீலானி
வாரமுள னுகிலா மாவரு சகாயனு
மாரரா கவுரி வலவா."

சசிவர்ண பெரியவுடையாத்தேவர் கொடுத்திருந்த
தெளியூருக்குப் பதிலாக ஆச்சான்குளமளித்த
முத்துவடுகநாதத்தேவர்மீது பாடியது.

மைக்ரீ பணைப்பண்டு, பூசித்த புண்ய மகிமையினுற்
சக்ரேச னென்னச் சசிவர்ணராசன்றவத்தில் வந்தாய்
மிக்ரீட வேந்தர் பணிசெய வாணைமிகச் செலுத்துஞ்
சுக்ரீப நீவடு கேந்த்ரா குழந்தைத்துரைசிங்கமே.

இன்னும் இவரியற்றிய செந்தமிழ் நூல்கள் பல.

அவை

1. மண்டலகோட்டை வண்டுவனப் பெருமானுசல்
2. திருப்புத்தூர் வைரவரலங்காரம்
3. திருப்புனவாயிற் பள்ளு
4. காலசங்காரமூர்த்தி வெண்பா வண்ணம்
5. புதுக்கோட்டையரசர் வழிபடுகடவுளாய் அவ்வரண்மனையிலெழுந்தருளியிருக்கும் ஸ்ரீதக்ஷிணமூர்த்தி மீதியற்றிய மும்மணிக்கோவையும் முன்கூறிய நக்ஷத்திரமாலை முதலாய ஐந்து நூல்களும் கிடைத்தில.

குமார முத்துவிஜய ரெகுநாதர், முத்துக்குமார விஜய ரகுநாதர், செல்லத்தேவர் என்கிற விஜயரெகுநாதர், முத்து ராமலிங்க சேதுபதியாகிய சேதுவேந்தர், சிவகெங்கை சசிவர்ண பெரியவுடையாத்தேவர்; முத்துவடுகநாத வுடையாத் தேவர், சிவகெங்கையைச் செங்கோலோச்சிய மருதுபாண்டியன், தஞ்சைப்பிரதாபசிங்குமகாராஜர், புதுக்கோட்டை விஜய

ரகுநாதத் தொண்டமான் ஆகிய முடிமன்னரும், சிங்கவனம் மெய்க்க கோபாலர், பாப்பாநாடு இராமலிங்க விஜயத்தேவர் ஆகிய ஜமீன்தார்களும், திருமிழலைக் கூற்றத்து வேளாண் குலதிலகராகிய செங்கால பிள்ளை இராமநாதபுரம் சிவகங்கை சமஸ்தான முதன் மந்திரிகளாகிய முத்திருளப்பபிள்ளை தாண்டவராயபிள்ளை முதலிய வள்ளல்களும் இவர் (2-வது சர்க்கரைப் புலவர்) காலத்தவராவார்கள்.

இவர் காலத்திருந்த புலவர்கள், வெண்பாப்புலிப் புலவர், சீகாழி வடுகநாத தேசிகர் ஆதியோராவர்.

இத்துணைப் பெரியார்கள் காலத்திருந்த சர்க்கரைப் புலவருக்கு, சாந்துப்புலவர், சீனிப்புலவர், உய்யவந்தாப் புலவர், முத்துமுருகப் புலவர் என்ற நான்கு புதல்வர்கள் பிறந்தனர்.

இப்புலவர் பெருந்தகை தஞ்சையைச் செங்கோற் செலுத்திய பிரதாபசிங்கு மன்னராற் பாராட்டப் பெற்றவரென்பது முன்னர்க் கூறியதாலறியலாகும். பிரதாபசிங்கு மன்னர் கி. பி. 1735 முதல் 1765 வரை யாட்சி புரிந்தவரென்பது அறியப்படுவதால் 2-வது சர்க்கரைப் புலவரும் (கி. பி 1700க்கும் 1800க்குமுள்ள) இடையிட்டகாலத்து வாழ்ந்தவரென்று இனிது அறியப்படும்.

## அரண்மனையாரும், அஞ்சுகோட்டைப்பத்து நாட்டாரும் சர்க்கரைப் புலவருக்கு கொடுத்த பட்டயம்.

............மகாமண்டலேஸ்பரன் ஹரியராய தளவிபாடன் மூவராய கண்டன். மண்ட.........துட்டரில் துட்டன கெட்டேரன். சிட்டரில் சிட்டன்.........உத்தர சப்ததீவா திபன். எம் மண்டலமுந் திறைகொண்டருளிய ராஜதிராஜன் ராஜபரமேஸ்வரன் ராஜகெம்பீரன் ராஜாக்கள் தம்பிரான், ராஜசமர்கோலா கலன்............சாளுவன், அஷ்டலக்ஷ்மி சம்பனன், கெர்ப தளவிபாடன் சிங்கங்கொட்ட மடக்கினன், வையாளி நாராயணன், இவுளிபாவடி மிதிச்சேறுவார்கண்டன். பரிக்கு நகுலன், கொடைக்குக் கன்னன், வில்லுக்கு விஜயன், சொல்லுக்கரிச்சந்திரன், சேது காவலன் ராமநாத சுவாமி காரிய பூஜா துரந்தரன், அனுமக்கொடி சிங்கக்கொடி, கருடக்கொடி புலிக்கொடி, சேவல்கொடி காவிக்கொடி, குடைமேல் சல்லிதிபன் செம்பிவளநாடன், நாவலம் பெருந்திவுக்கு நாயகன்பிரபு

மகாதேவராயர் மல்லிகா விருப்பாவல தேவராய ஸ்ரீவாக தேவ ராய பூதேவராய அச்சுததேவமாராய...............விராச்சியம் பண்ணியருளாகின்ற சாலிவாகன சாகாப்தம் ரூளஎ0க்கு மேல் செல்லாநின்ற விபஷ உத்திராயணம் சித்திரைமீ 24உ சுக்கிரவாரமும் சதுர்த்தசியும் அசுபதியும் கூடின சுபதினத் தில் ராசமானிய மகாராசா சாயபு அவர்கள் காரியத்துக்கு கர்த்தரான வெங்கோசியப்பா அவர்கள் காரியம். ரெங்கநாத முதலியார் அவர்.........கு வடக்கு ஒரூர் சீமைமாகாணம் அஞ்சுகோட்டைப்பத்துப் பாம்பாத்துக்குத்தெற்கு திருவேகம் பத்துக்கு கிழக்கு சமுத்திரத்திற்கு மேற்கு நான்கெல்லைக்குட் பட்டவர்களை பாகவதகாவிய பிரசங்கம் சர்க்கரைப் புலவருக் குப் பட்டயங் கொடுத்த பரிசாவது, அஞ்சுகோட்டைப்பத்து நாட்டார் அ.........கிட கணக்கப்பிள்ளை சிவணபிள்ளை. திரு வத்தூர் பாண்டிப் பெருமாள் பிள்ளைகட்கு முடிதேவராய பிள்ளை. கொட்டகுடி அளகுபிள்ளை. கள்ளிக்குடி சேவுகப் பெருமாள் பிள்ளை, சூரம் புள்ளி அழகி...........பெருமாள் பிள்ளை. வாகைக்குடி பெருமாள் பிள்ளை புல்லுக்குடி அளக பிள்ளை முதலிய பிள்ளைமார்களும் அஞ்சுகோட்டை தேவத் தான அம்பலகாரன் கருமலைத் தேவன் சின்னுதித்தேவன் பிச்சை.........பிள்ளையாரேந்தல் மல்லாரித்தேவன். கிளியூர் ராக்கத்தேவன், அஞ்சு ரெண்டு வயல் மன்னங்காரன். அம் பலவன். சேமணிவயல் மாதவரி வடகோட்டை சோற்றுப் பானை அம்பலம், மங்கலம் ராக்கப்பனம்பலம், கலனூர் பலமுடி பச்சைமாலைப்பெருமாள் ஆடானை ஆதியூர்ஆதிகாவலாடானை குப்பைப்பிச்சை மருதன்குடி கருப்பன் அம்பலம், ஆற்றங்கரை மாகாணம்ஆண்டியப்பனம்பலம். இரவு சேரிஅனுமத்தேவன் வெங்களூர் திடக்கோட்டைதேவன், மல்லித்தேவன், திருக் கோட்டித்தேவன், பொன்னஞ் செட்டியார், ஆக்களூர்க் கட் டத்தேவன், ஆவணியத்தேவன், பெய்த்தேவன், நாராயண செட்டி வீரக்கோன், புலியூர் நல்லாபிள்ளை, புல்லூர் ஆண்டித் தேவர், வீரப்பன் அம்பலகாரன், புள்ளாருதேவன், வேடப் பன்அம்பலகாரன், கஞ்சாங்கோன், யனிச்சகுடி ஆவிடையாப் பிள்ளை, சித்தமங்கலம் சேவுகன் அம்பலகாரன், குஞ்சரங் குளம் மரிச்சக்குட்டி அம்பலகாரன், ஒரூர் உடையார் அம்பல காரன், மாகாளி முக்கந்தன், பனஞ்சாயல் வெள்ளயத்தேவன், குப்பாருதேவன், நாவலூர் வடுகத்தேவன், ஆவத்தா பிள்ளை, பெரியணு பிள்ளை, மருங்கூர் முருகப்பன், பெருமாள்க்கோன்

வட்டாணம் வீராண்டன் சின்னத்தொண்டி, பொன்னக்கண்டி நாச்சியப்பன், தேளூர் திருமலைக்கோன், மணக்குடி அளகரு தேவன், பனங்குளம் கோரணி அம்பலகாரன், முள்ளூத் தகம் பெத்தாருதேவன், ஆண்.........விளைசித்திரன் அம்பல காரன், சினி அம்பலகாரன், பாரூர் ஆடானை அம்பலகாரன் இலுப்பைக்குடி உடைச்சி அம்பலகாரன். ஆயங்குடி ஆண் டான் அம்பலகாரன்........ராய்ப்பன். அம்பலகாரன். கீழ்ப் பணையூர் கோணத்தேவன். சிறுவண்டல..............பரன் தோட்டாமங்கலம் செய்யான் அம்பலகாரன். நகரிகாத்தான் பெரியம்பலகாரன். சின்னம்பலகாரன். ஆலம்பாடி சின்னக் கள்ளப்பத்தான் மானூர் ஆடானைத்தேவன் அரசத்தூர் வீரப் பன் அம்பலகாரன், பெறுவாக்கோட்டை ரெகுநாதன் சேருவைகாரன், மங்கலகுடி ராயப்பன், முத்துவீரமுக்கந்தன் மல்லனூர் உடையார் அம்பலகாரன் சிறுநல்லூர் குப்பையன் அம்பலகாரன். பாகனூர் நல்ல பெருமாள்தேவன். அதவத் தூர் மூட்டாபிள்ளை. முருகப்பன், வசந்தனூர் ராமலிங்க... ...அம்பலகாரன், குதிரைவெட்டி ராவுத்தன் அம்பலகாரன். சருவன் அம்பலகாரன். களபத்தூர் மூண்ணை அம்பலகாரன். கப்பலூர் கரிய மாணிக்கப் படிக்காசு அம்பலகாரன். பொன் ஞணிடான் அம்பலகாரன்.....கண்ணங்குடி படைகண்டான் அம்பலகாரன். சிறுக்கல் உடைச்சியம்பலகாரன் திருமயக் கோட்டை சாத்தப்பன். விளங்குடி திருவெங்கடக்கோன். ஆரக்கோட்டை கருங்க நாடான், அனுமந்தக்குடி வணங்கா முடி அம்பலகாரன். விளாங்காட்டூர் கருதப்பன் அம்பல காரன். சிறுவாளூர் சின்னவேட்டையம்பலம். சிறுனையூர் சங்கிலி நாச்சியம்பலம் பிடாரவேந்தல் உலகப்பனம்பலகாரன். நனியூர் பொத்த அம்பலகாரன். சுக்......சித்தூர் நாட்டார் அனைவரும் திருவாடானையில் ஆதிரெத்னேசுரர் சந்நதியில் கொடுத்த பட்டயமாவது. ராமசரித்திர இராமாயணம் பரிசுக் கட்டளையாக இச்........தேவதாயம், பிர்மதாயம் மானியம் மடப்புரம் பண்ணைக்கிராமம் ஆமாக்கிராமத்தில் அரண்மனைக் குங்குடிக்கும் பொதுவில் நஞ்சை புஞ்சை விளைந்த நிலத்துக்கு மாத்தாக்குறுணி. நாட்டார் பட்டயமாகக் கொடுத்தபடியி னலே இந்தப் பட்டயப் பிரகாரம் சந்திராதித்தர்வரைக்கும் பயனெவ்வளவோ அந்தப் பயனை அடைவாராகவும்.

இதைப் பொய்யென்று நினைத்தவர்கள் சேதுவிலே காசியிலே காராம் பசுவைக் கொன்ற தோஷத்தை யடைவாராக. இந்தப் பட்டய மெழுதினேன் வானக்குடி பெருமாள்பிள்ளை.

சிவகெங்கை ஸமஸ்த்தானுதிபதிகள் மருதன்குடி கிராமம் கொடுத்த விபரம்.

சிவகெங்கை சீமை உருவாட்டித் தாலூகா ஆத்திகுடி மாகாணம் ஓட்டக்கார மருதன்குடிக் கிராமம் சர்க்கரைப் புலவர் பிரசங்கத்துக்குமுன் குரோதிஹூ புரட்டாசிமீ ௰அவ சசிவர்ண பெரிய உடையாத் தேவரவர்கள் விடப்பட்டது.

நான்கெல்லை கல்லுக்கு மேற்கு. அஞ்சாமட்டி கொடுமணி யேந்தலுக்கு வடக்கு. கீழ் மருங்கூருக்கு கிழக்கு. முடித்தானைக்குத்தெற்கு. இதற்குட்பட்ட விரையடி கூ௰, உா யீசாபாகம்(விடி) கூ௰, சாஜ ஆகவிடி கூ௰, கூா நெல்விளைவு (விடி) அ௰, சா விளைவுக்கு யோக்கியமான தருசு (விடி) ௰, உா நெல் யீசாபாகம் அ௰ச இ நீர்நிலைத் உ௰ள நத்தம் நிக திருவிருப்புக்கு உ. விளைவுக்கு கூ௰உ சுத்தப்பொட்டல் கு கூ௰ சராசரி வருமானம்நெல் ா, கூ௰ ா ரூ உா உ௰ள இ பொறுப்புவரி உ௰உ பத்து கவபக பணம் ரெ. கூ௰ரு.

மருதங்குடி நிருபம். குரோதிஹூ உடையாத்தேவர் நிருபம் க. மருது சேர்வைகாரர்அவர்கள் காலத்தில் பிங்களஹூத்தில் காடாவயல் மருதங்குடிநிருபம் காடாவயல் கீலகஹூ நிருபம் க. மறுபடி நிருபம் க. விக்கிரமஹூ ஆச்சாங்குளத்துக்கு விஜய ரெகுநாத பெரிய உடையாத் தேவர் நிருபம் க.

# முதலாம் இராசராசன் அமைத்த திருக்கோயில்.

திரு. J. M. சோமசுந்தரம் பிள்ளை அவர்கள் B. A., B. L.,
தஞ்சை அரசர் திருக்கோயில் கண்காணிப்பாளர்.

சோழர் முன்னோனாகிய முசுகுந்தச் சக்கரவர்த்தி பிரதிட்டித்த "ஆரூர்த்தியாகேசர் பதம் பணிந்து செங்கோலோச்சியலகில் புகழ்பெறு ராச ராச மன்னன்" தஞ்சையில் கோயில் அமைப்பதற்கு முன்னர்த் திருவாரூர்த்தியாகேசரை நாடோறும் சென்று வழிபட்டு வந்ததனால் தஞ்சைக் கோயிலை அமைத்த பொழுது திருவாரூர்க் கோயிலிலுள்ள ஏற்பாடுகளையே கைக்கொண்டதாகத் தெரிகிறது. (1)

இத்தலத்திற்குரிய ஆகமம் மகுடாகமம். (2) இத்தலத்திற்குரிய தீர்த்தம் சிவகங்கை. அப்பர் சுவாமிகள் தேவாரத்தில் கூறியுள்ள **தஞ்சைத் தளிக்குளம்** இதுவே என்பர். இதனடுவே சிவலிங்கத் திருவுருவம் எழுந்தருளப் பெற்றுளது. தேரைத் தீர்த்தம் எனப்பட்ட குளமொன்று இப்பொழுது நடராசர் திருமண்டபத்திற்கடுத்து இருந்தது எனவும், இது இப்போது மூடப்பெற்று ஒரு கிணறளவே அவ்விடத்தில் இருப்பதாகவும், சரபோஜிமன்னர் கல்வெட்டு (3) ஒன்று குறிக்கின்றது.

---

(1) இதன் உண்மை இப்பொழுது காணப்படுவனவற்றுள், "திருவாரூர்க் கோயிலில் தியாகேசர் ஸ்தாபிக்கப் பட்டிருப்பதுபோலத் தஞ்சைப் பெருவுடையார் கோயிலிலும் தியாகேசர் ஸ்தாபிக்கப் பட்டிருக்கிறார். திருவாரூர்த் தியாகராசாவுக்கு விடங்கரென்று பெயர் இருப்பது போலத் தஞ்சையிலும் விடங்கரென்றும் பெயர். திருவாரூரில் தியாகராசாவுக்குரியது அஜபா நடனம். தஞ்சையிலுமஃதே. திருவாரூர்க் கோயிலில் நடைபெறுவதுபோலத் தஞ்சையிலும் வஸந்தோத்ஸவம் 18 நாள் நடைபெறுகின்றது. திருவாரூரில் தியாகராஜாவுக்குரிய சுத்த மத்தளம், எக்காளம் தஞ்சையிலும்உள. திருவாரூரில் தியாகராஜா எந்தத் தினங்களில் எவ்வாறு புறப்படுகின்றாரோ அவ்விதமே தஞ்சையிலும். திருவாரூரில் தியாகராஜாவுக்குப் பூஜை நடந்தபின் மூலலிங்கத்துக்குப் பூஜை, தஞ்சையிலும் அவ்விதம். திருவாரூரில் உற்சவத்தில் குறவஞ்சி நாடகம் நடைபெறும்; தஞ்சையிலும் குறவஞ்சி நாடகம் உற்சவ காலத்தில் நடைபெற்று வருகிறது. திருவாரூரில் சிலகாலமாய்க் குறவஞ்சி நடைபெறுவது நழுவி

இவ்வாலயத்துள்ள பெரிய நந்தி ஒரே கல்லில் செதுக்கப் பெற்று இறைவன் சந்நிதிக்கு எதிரே உயர்ந்ததோர் மேடை மண்டபத்திலுள்ளது. இந்தியாவிலுள்ள பெரிய நந்திகளுள் இஃது இரண்டாவதாகும். பன்னிரண்டடி உயரமும் பத்தொன்பதரை அடி நீளமும் எட்டேகால் அடி அகலமுமுடையது. இது கால அளவில் வளர்ந்து வந்ததாகவும், அதனைத் தடைப்படுத்த முதுகின் பின்புறத்தில் ஒரு ஆணி அறைந்ததாகவும் மற்றும் பல கதைகளுமுண்டு. இந் நந்தியானது திருச்சிராப்பள்ளி ஜில்லா பெரம்பலூருக்கு அணித்தான பச்சைமலையினின்றும் கொணரப்பட்டதென்பர். இந் நந்தி மண்டபத்தூண்களில் தஞ்சை நாயக்க அரசர்களின் பிரதிமைகள் செதுக்கப்பட்டிருப்பதால், அவர்களால் கட்டப்பட்டதாகும்.

ஆலயத்துள்ள சிவசொத்துக்களைக் கண்காணிக்கும் முக்கிய அதிகாரி சண்டேசுவரர். அவர் பெயரிலேயே கோயில்களின் வரவு செலவு கணக்குகள் எழுதப்பட்டு, விலைகொள்வதும், விற்பதும் அவர்பெயராலேயே நடைபெறுவதும் வழக்கமாயுள்ளது. ஆதலால் முதல் பிரகாரத்தில் அவருக்கு மாத்திரமே இறைவன் சந்நிதிக்கு அடுத்துக் கோயில் கட்டுவது முற்கால வழக்கம். அதற்கிணங்க இராசராசனும் பிரகாரத்தில் சண்டேசுவரருக்கு ஆலயம் கட்டுவித்து இக்கோயிலைச் சார்ந்தவையாவும் அவர் பெயரால் நடைபெற ஏற்பாடு செய்தான். இச் சந்நிதியையும், கோயிலின் கீழ்ப்பக்கமுள்ள இராச ராசன் திருவாயில் கோபுரத்தையும் இராச ராசன் தனது இருபதாம் ஆட்சி யாண்டில் பன்னிரண்டாயிரம் தீவங்களை வென்றதன் முன்பே கட்டியிருந்திருக்க வேண்டும். இராச ராசேச்வரர் கோயிலையடுத்து இச் சண்டேசுவரர் கோயில் மட்டுமே இம் முதற் பிரகாரத்தில் அந்த நாளில் கட்டப்

---

யிருப்பதாகத் தெரிகிறது. திருவாரூரில் சுவாமி புறப்படும்போது சுந்தர மூர்த்திகள் விக்கிரகம் முன் கொண்டுபோவது வழக்கம். ஆனால் இராசேந்திரன் காலத்தில் அந்த தானத்தில் தன் பிதாவாகிய இராச ராசனது விக்கிரகத்தைக் கொண்டுபோகும்படி ஏற்பாடு செய்தான். அஃது இன்னும் நடைபெறுகிறது."—K. S. ஸ்ரீனிவாசபிள்ளையவர்கள் தமிழ் வரலாறு ii. 162.

(2) M. S. No. of Tanjore Saraswathi Mahal Library

(3) Ins. of 1924.

பெற்றது. மற்ற சந்நிதிகள் அதற்கடுத்த பிரகாரங்களில் இருந்திருத்தல் அமையும். பிற்காலத்தில் அவையாவும், இம் முதற்பிரகாரத்துள் கொணர்ந்து கட்டப்பட்டிருத்தல்வேண்டும். ஸ்ரீ உமாபரமேச்வரி அம்மையாரின் கோயில் இவ்வாலயத்திற்கு வடபுறத்தில் உள்ள சிவகங்கைத் தோட்டத்தில் இருந்திருந்து, ஒருநாயக்கர்காலத்து இடிக்கப்பட்டு, மற்றொருநாயக்கர் காலத்து இப்போதிருக்கும் தானத்தில் **உலகமுழுதுடையாள்** என்ற திருநாமத்துடன் அமைக்கப்பெற்றது என்றும்[1] தெரிகிறது. கோயிலின் வடமேற்குப்பிரகாரத்திலுள்ள ஸ்ரீ ஆறுமுகப் பெருமானின் கோயில் தென்னிந்தியாவின் சிற்பவேலைகளுள் சிறந்ததொன்றாம். இதன் சிற்பநுட்பங்களைக் கவனிக்குமிடத்து இது கட்டப்பெற்ற காலம் 12-வது நூற்றாண்டாகக்கூறலாம். இக்கோயில்களிலுள்ள கல்வெட்டுகள் ஒன்றுமே இதனைப்பற்றிக் கூறவில்லை. இக்கோயில் தஞ்சையில் ஆட்சிபுரிந்த நாயக்கர் காலத்ததென்பதும் அக்காலத்துச் சிற்பி ஒருவனால் தான் தன் தொழிலில் ஆழ்ந்து வேலைசெய்துகொண்டிருக்குமளவில் அதனைக் காணவந்த தனது அரசனது கையால் கொடுக்கப்பட்ட அடைக்காயை உண்டு உண்மைதெரிந்து, தனது அறியாத தவறுக்கு பரிகாரமாகத் தன் திறமையெல்லாம் விளங்க இக்கோயிலை நிரூபணம் செய்தானென்பதும் ஒரு கூற்று[2]. ஆறுமுகப் பெருமானின் திவ்ய சொரூபம் மிக வனப்புடையது. அவரைப் பற்றி அருணகிரியார் திருப்புகழில் மூன்று பாக்களும் பாடியுள்ளார். இக்கோயிலின் துவாரபாலகர்கள் உருவம் மாசற்ற கருங்கல்லால் அழகுற அமைக்கப்பெற்றுள்ளன.

பரிவாராலயத்துப்பிள்ளையார் அதாவது சுற்றுக்கோயிற் பிள்ளையார் மேலைச்சுற்றாலயத்து வீற்றிருப்பதால் இற்றை நாளில் காணப்படும் கணபதி கோயில் தஞ்சை மகாராட்டிர மன்னர் சரபோசி II அவர்கள் கி. பி. 1802—3-ல் எடுத்ததென்பர். கோயில் தென்னண்டைச் சுற்றாலயத்தில் செதுக்கியுள்ள கல்வெட்டு[3] ஒன்றால் கணபதி கோயிலை எடுப்பித்தும் பழைய கணபதி விக்கிரகத்தை எடுத்துப் புதிய தொன்றைப் பிரதிட்டித்தும், தக்ஷிணாமூர்த்திசந்நிதிக்குப் படிகள்எடுப்பித்தும்,

---

1. S. I. I. Vol. II.

2. Ins. இக்கர்ணபரம்பரை மதுரை நாயக்கர் வமிசத்து திருப்பணிகள் பெரும்பாலனவற்றிற்குச் சொல்வது வழக்கமாயுள்ளது.

3. Ins. of 1924.

பெருவுடையாருக்கு வெள்ளியால் இடப முதலிய வாகனங்களும், பல ஆபரணங்களும், கொடுத்தும், கோயிலுக்குத் தளவரிசை போட்டும் பல திருப்பணிகள் செய்ததாகத் தெரிகிறது.

கோயிலின் உட்பிரகார வடகிழக்கில் காணும் நடராசப் பெருமானின் சந்நிதியும், பிற்காலத்தே நாற்புறமும் திருமதில்களுக்கடுத்த திருச்சுற்று மாளிகைகளும் இராசராசன் ஆணையின் பேரில் கட்டப்பெற்றன. தனது சேனாதிபதியும், மந்திரவோலை நாயகருமான கிருஷ்ணன்ராமனான மும்மடிச்சோழ பிரம மாராயனால் மேற்புறத்தையும் தெற்கில் உள்ள பிரகாரத்தையும் கட்டினானென்றும், மற்ற இருபுறங்களிலுமுள்ள பிரகாரங்களை அரசனே முற்றுவித்தானென்றும் கல்வெட்டுகள் கூறுகின்றன. சுற்றாலையிலுள்ள இலிங்கங்கள் மகாராட்டிர மன்னர் காலத்துப் பிரதிஷ்டை செய்யப்பெற்றனவென்பர். அதனிடையே திக்குப் பாலகர் எண்மருக்கும் அவரவர்க்குரிய திசைகளில் சிறிய ஆலயங்கள் கட்டப்பட்டுள்ளன. இக்காலத்தில் அவற்றின்மீது கற்கலசங்களே காணப்படுகின்றன. ஆனால் பொற்றகடுசுருக்கின செப்புக்குடங்கள் இராசராசனுடைய குருக்கள் ஈசான சிவ பண்டிதரால் கொடுக்கப்பட்டன என்பது ஒரு சாசனத்தால் விளங்குகின்றது.

இக்கோயில் மேலைப்பிரகாரத்தில் வேம்பும் மந்தாரையும் நிற்கின்ற கிழக்கு நோக்கிய மேடையில் சுமார் முப்பத்தைந்து ஆண்டுகட்கு முன்னர் கருவூரார் கோயிலென ஒரு சிறு கோயிலெடுத்து, யோகியர் உருவச்சிலையமைத்து, நாடோறும் பூசையும், வியாழன்தோறும் சிறப்புறு பூசனைகளும் புரிந்து வழிபட்டு வருவதை யாவரும் காணலாம். இவரே இராசராசன் காலத்து இவண் வந்து தவிய சித்தர் பெருமானாதல் வேண்டும். இவரைப் பற்றிச் சித்தர் நூல்களில் விரிவாகக் காணலாம். ஆதலின், இக்கோயிலில் இப்பெரியார்க்குத் தனியிடம் உண்டாய தொடர்பு உணரற்பாலது. மற்றும், கருவூர்ப் புராணத்தில் கூறப்பெற்றவர் திருவிசைப்பாப் பதிகங்களின் ஆசிரியரான கருவூர்த் தேவரெனவும், அவர் "இராசராசேச்சரம்", 'கங்கை கொண்ட சோழபுரம்' ஆகிய இவ்விரு பெரிய கோயில்களின் மீதும் பாடல்கள் இயற்றினமையின் இராசராசனுக்குப் பிற்பட்டவராயிருத்தல் வேண்டுமெனவும் கூறும் கூற்றும் ஆராயற்பாலது.

அக்காலத்து, திருவிசைப்பா ஆசிரியர் இறைவன்கோயிலை 'இஞ்சிசூழ் தஞ்சை யிராசராசேச்சரத்திவர்க்கே," எனக்குறித்

திருப்பதால் திருக்கோயில் நகரின் மத்தியில் அமைந்திருத்தல் வேண்டும். பிற்காலத்துக் கால இயல்பாலும், அரசியல் சூழப் பத்தாலும், நகரம் குன்றி இருகூறுக்கப்பட்டதென்பதும் புலப் படும். அக்காலந்தொட்டே கோயில் சிறப்புக்களில், மற்ற நகரவழக்கத்திற்கு மாறாக இறைவன் கோயிலைச் சுற்றிவராது நகரை வலம் வரும் ஏற்பாடு உண்டானதென்பது பெறுதும்.

இத்தலத்திற்குப் பிரகதீசுவர மகாத்மியம், சமீவனக்ஷேத் திர மகாத்மியமென்னும் வடமொழிப் புராணங்களும் மேற் கூறிய திருவிசைப்பா திருப்பதிகமும், திருப்புகழில் மூன்று பாக்களும் கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகர் இயற்றிய 'தஞ்சைப் பெருவுடையாருலா' என்ற பிரபந்தமுமுள.

இராசராசன் இப்பெரியகோயிலை எடுப்பித்ததன் பயனாகக் குடிகள் அரசன்பால் மிக்க அன்பு பாராட்டி அச்சோழன்காலத் தில் வைகாசிப் பெரிய விழாவில் நிகழ்த்திய 'இராச ராசேச்வர நாடகம்' என்னும் ஒரு நாடகம் இக்கோயிலில் நடைபெற்று வந்தது. இவன் மகன் இராசேந்திரன் அரசாட்சியின்நான்காம் ஆண்டில் இந்நாடகம் ஆடுவோனுக்கு ஆண்டாண்டுதோறும் நாற் றிருபதின் கலநெல் ஏற்பாடு செய்யப்பட்டதென ஒருகல்வெட்டு கூறுகின்றது. அக்காலத்தில் நடனங்களும், நாடகங்களும், அநேகமாய் ஆலயங்களிலுள்ள அரங்க மண்டபங்களிலேயே நடைபெற்றன. திருவிசைப்பா ஆசிரியர் "மின்னெடும் புருவத் திளமயிலனையார் விலங்கல் செய் நாடகசாலை, யின்னடம் பயிலு மிஞ்சிசூழ் தஞ்சை," எனக் கூறுவதால் நகரில் பல ஆடரங்கும் நாடகசாலையுமிருந்தனவென்னலாம். மற்றும்இசைநாடகங்களில் வல்ல நாடகமய்யன், சாக்கை, கனபாடி, காமரப் பேரரையன், வாத்தியமாராயன், முதலியோரும் இருந்தனரெனவும் தெரி கிறது. இராச ராசேச்வர நாடகம் வெகு காலமாக வழக்கி லில்லை. தஞ்சையில் பிற்காலத்து அரசாண்ட சரபோசி II மன்னர் காலமுதல் அம்மன்னர் மீது கொட்டையூர் சிவக் கொழுந்துதேசிகர் இயற்றிய 'சரபேந்திர பூபால குறவஞ்சி நாட கம்' என்ற நூலை ஆதாரமாகக்கொண்டு இக்கோயில் சைத்ர ஆண்டு விழாத்தோறும் அஷ்டகொடி விழாவன்று இக்குறவஞ்சி நாடகம் நடைபெற்று வருகிறது.[1]

---

(1) இக்குறவஞ்சி நாடகவகையுள் சேர்ந்தது. இது அஷ்டகொடி குறவஞ்சி என்றும், குறவஞ்சி நாட்டியம் என்றும் வழங்கும். குறத்தியின் இயல்பு, அவள் குறி கூறுதல், அவளைக் குறவன் தேடிவந்து காணல் முத லிய செய்திகள் இதன்பால் அமைத்திருத்தலின் குறவஞ்சி எனப்பெயர்

சோழர் காலத்தில் மாதந்தோறும் திங்கள் விழாவென இராசராசன் பிறந்த நாளாகிய திருச்சதயத்திருவிழா பன்னிரண்டும், கார்த்திகைத்திங்கள் கார்த்திகை நாள் ஒன்றும், ஆகப் பதின்மூன்றும் நிகழ்ந்தன. இம்மாதவிழாக்களன்றி ஆண்டுவிழாவாகவைகாசிப்பெரியவிழாவும் நடைபெற்றது. ஆட்டைப்பெரிய திருவிழாவுக்குக் கொடியேற்று நாளையும், ஆடவல்லான் எழுந்தருளு நாளையும் பறையறைந்து தெரிவிப்பார். அது ஒன்பது நாள் நடைபெற்றது. பின்பு திருவாரூர்க் கோயிலில் நடைபெறுவதுபோல இவ்வாட்டைவிழா பதினெட்டுநாளாகச் சித்திரையில் நடைபெற்றுவருகிறது. மற்றும் வசந்தவிழா, திருவாதிரை, முதலிய சகல சைவவிழாக்களும், நடைபெறுவன. 1934-ம் ஆண்டுமுதல் இராசராச சோழனின் சன்ம திருச்சதய விழாவும், ஐப்பசிதோறும் நடந்து வருகிறது.

இராசராசேச்சரத்திலுள்ள கல்வெட்டுகள் மிகப் பலவாகும். இராசராசன் காலத்தவை "நாம் குடுத்தனவும், அக்கன் குடுத்தனவும், நம் பெண்டுகள் குடுத்தனவும், மற்றும் குடுத்தார் குடுத்தனவும் வெட்டுக" என அவன் மொழிந்த

---

பெற்றதுபோலும். இக்கூத்து எவ்விதம் நடத்தப்படுகிறதென்பது இவண் கூறற்பாலது. குறவஞ்சிக் கூத்தில் வாயால் பாடுகிறவர்களும், கருவியில் வாசிக்கிறவர்களும் கலந்து கொள்ளுகிறார்கள். நடனமாதர்கள் குறைந்தது நால்வர் குறவஞ்சிப் பாட்டுக்களைத் தகுந்த இராகங்களில்பாடி ஆடுகிறவர்களது திறமைக்குத் தக்கபடி நடித்து மகிழ்விக்கின்றனர்.

"பார்கொண்ட புகழினேங்கும் பதியெனுந் தஞ்சைமேவும்
தார்கொண்ட மார்ப னெங்கள் சரபோஜி மன்னன்மீது
சீர்கொண்ட தமிழினுலே திகழ் குறவஞ்சி கூறப்
பேர்கொண்ட பிரகதீசர் பெறு கணபதி காப்பாமே,"

என்னும் காப்பும், மங்களமும் கூறியபின் கட்டியக்காரன் தோன்றி, சரபோஜி மன்னரின் வீரப்பிரதாபங்களைப்பற்றி உரத்த குரலில் சொல்லி, அரசன் பவனி வருதலைக் கூறி, பின் நடைபெற விருக்கிற இக்கூத்து யாதொரு விக்கினமின்றி முடிவுறுமாறு கடவுளைப் பிரார்த்திக்கும்படி அவன் சபையோர்களைக் கேட்டுக் கொள்ளுகிறான். பின்னர் தெருக்கூத்தில் நடைபெறுகிறதுபோல் ஒரு பெண் பிள்ளையார் வேஷந்தரித்துக் கொண்டு சபைக்குவந்து முன்னும் பின்னுமாக அசைந்து சாதாரண ஒரு நர்த்தனம் புரிவாள் அப்போது கட்டியக்காரன் அந்தப் பிள்ளையாரை நோக்கி இக்கூத்து யாதொரு இடையூறுமின்றி நடைபெறும்படி கிருபை செய்ய வேண்டுமென்று பிரார்த்திப்பான். அதன் பிறகு இருவரும் மறைந்து விடுவார்கள்.

முறைப்படி வெட்டப்பட்டுள்ளன. அவைகளுள், இராசராசனும், அவன் தமக்கை குந்தவையாரும் கொடுத்தன மட்டும் நடுவிமானத்திலும், பெண்டிரும் பிறரும் தந்தவையாவும் மற்றவிடத்திலும் காணப்படுகின்றன. விமானத்தில் வடபுறத்தில், திருமஞ்சன நீர் வந்து விழும் இடத்திற்கருகில் "ஏதத் விச்வ சிரேணி மௌலி" எனத் தொடங்கிய கல்வெட்டே முதன் முதலில் வெட்டியதாகும். இவைகளையும் பிற்போந்தார் காலத்தும் வெட்டிய கல்வெட்டுகள் யாவற்றையும் அரசாங்கக் கல்வெட்டு ஆராய்ச்சி இலாக்காவினர் அரிய குறிப்புக்களுடன் பல புத்தகங்களாக வெளியிட்டிருக்கின்றனர். இக்கோயிலிலுள்ள கல்வெட்டுக்களில் இராசராசனது 64, இராஜேந்திரனது 29, முதல் குலோத்துங்கனது 1 (ஒன்று) விக்கிரமசோழனது 1 (ஒன்று), பாண்டியகோனரியன்மை கொண்டானது 3, மற்றும் நாயக்க அரசர்கள், சரபோசி II மன்னன் முதலியவர்களுடையதுமான பல கல்வெட்டுக்களுமுண்டு. குறிப்பாக இராசராசன் கல்வெட்டுகளால் அக்காலத்துப் பலராலும் பிரதிட்டை செய்யப்

---

பின்பு தலைவன் பவனி வருகையும், தலைவியொருத்தி (மோஹினி) அவனைக்கண்டு காமுறுதலும், நிகழாநிற்க, மோஹினியின் தோழிகள் (சகிகள்) திடீரெனச் சபைக்கெதிரில் தோன்றி நுட்பமும், திறமையும், அழகும், இனிமையும் மேம்பட்ட நடனம் புரிவார்கள். அதன்பின் மோஹினியும் சபை முன்தோன்றி அவள் தான் சரபோசிமன்னன்மீது கொண்டுள்ள விரக வேதனையால், மன்மதனையும், சந்திரன், தென்றல், குயில் முதலியவற்றையும் நிந்தித்துப் புலம்பித் தன்காதலைத் தனது தோழியருக்கு உணர்த்துவாள். தங்கள் தலைவி விரகதாபத்தால் படும் பாட்டைத் தோழிகள் பார்த்து, அவள் காதலனை அவளிடம் எவ்வாறு கொண்டு சேர்ப்பதென்று வகை தெரியாது திகைத்து நிற்கின்றனர். அப்போது மோஹினி சோகமேலிட்டு மெய்சோர்ந்து கீழே விழப்போகிறாள். அத்தருணம் மலைகளில் சஞ்சாரம் செய்யும் குறத்தியின் கானத்தைக்கேட்டு உற்சாகங்கொள்ளுகிறாள். தலைவி அக்குறத்தியை அழைப்பிக்க, அவள் வந்து வாசல் வளம் கூறுகிறாள். பின்னர் தலைவி குறத்தியை யாரென வினவுதலும் குறத்தி தனது தேசம், மலைவளம், சாதிவளம், நதிவளம் முதலியனவற்றைக் கூறுகின்றாள். அப்பால் தலைவி, தன் கையைப்பார்த்து குறிசொல்லவேண்டுமென்று கேட்டதும், குறத்தி தெய்வங்களைவேண்டிப் பின்பு குறிசொல்லத் தொடங்கித் தலைவியின் உள்ளக் கருத்தையறிந்து மோஹினியின் காதலைக் குறிப்பாகவும், வெளிப்படையாகவும் சொல்லி, தலைவன் உன்னை விரைவில் மணந்தருள்வான் என்றும், கூறுகிறாள். இத்துடன் குறவஞ்சி நாடகம் முடிகிறது. இக்கோயிலில் நடிக்கப்படும் குறவஞ்சிக் கூத்தில் மோஹினியின் காதல் இவ்வாறு முடிவடைய; நாடகப் பகுதியில் குறத்தி, குறவன், அவன கையாள் சிங்கன், இவர்களுடைய செய்கைகளும் காதல் நிகழ்ச்சிகளும் கூறப்படுகின்றன.

பெற்றுள்ள திருமேனிகள், அவைகளுக்கு அவர்கள் கொடுத்த விளைநிலங்கள், திருப்பரிகலங்கள், திருச்சின்னங்கள், திருவாபரணங்கள் முதலியவற்றிற்கு விபரமும், எவரும் எவ்வித குறையும் கூறுவதற்கு இடமின்றி உப்பு முதல் கற்பூரம் வரைக்கும், வேண்டிய எல்லாப் பண்டங்கட்கும் செய்யப்பட்டுள்ள ஏற்பாடும் பிறவும் நன்கு உணரற்பாலன.

**சோழர் ஓவியங்கள்** :—ஸ்ரீபெருவுடையார் (பிரகதீச்வரர்) மூலத்தானச் சுற்றுமாளிகையில் சுமார் 930 ஆண்டுகள் மறைபட்டிருந்த பொக்கிஷமாகிய அரிய ஓவியங்கள் 1931-ம் ஆண்டில் திரு, அறிஞர் S. K. கோவிந்தசாமி பிள்ளை M. A., அவர்களால் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. அவை சோழர் காலத்தியவை என்றும், இந்திய ஓவியக்கலைஞானத்தில் மிகஉயரியதோர் இடம் அவைகளுக்குரியதென்றும் அறிஞர் எண்ணுகின்றனர். சிற்சில ஓவியங்களே இப்போது காணக்கிடக்கின்றன. மற்றவை நாயக்கர் காலத்திய ஒரு மெல்லிய சுண்ணச்சாந்துப் பூச்சால் மறைபட்டிருக்கின்றன. கிடைத்தவை சைவ சமய குரவர் சுந்தரமூர்த்தி நாயனருடைய ஜீவிய சரித்திரம், திரிபுரசம்ஹாரம், மற்றும் புராண சம்பந்தமுடையன காண்போரைப் பரவசப் படுத்தக் கூடிய வகை தீட்டப்பெற்றுள்ளன. இவை அக்காலத்துக் கலைவளர்ச்சியையும்; தீவிரசைவ உணர்ச்சியையும் காட்டுவனவாகத் திகழ்கின்றன.

முற்காலத்தில் கலையினும் கைத்தொழிலினும் மேம்பட்டிருந்தாரது தொழில் நலத்தைப் பிற்காலத்திற்கு நினைப்பூட்டும் ஞாபகச்சின்னமாகவும், தன் தலைமை நகரமாகிய தஞ்சையில் சய சீலனகத் தான் வீற்றிருந்ததற்கு அடையாளமாக எடுப்பித்த வெற்றிநிலையம் போலவும், அவனுக்கு இறைவன் பேரிலுள்ள அளவில்லாத அன்பைக் காட்டற்குரிய ஆபரணமாகவும், இப்பெரிய கோயிலானது விளங்குகிறது. அதன் பரந்த இடமும் சிறந்த சிற்பங்களும், அணிவகுத்த திருச்சந்நிதிகளும், பார்ப்போர் மனத்தைப் பரவசப்படுத்தி நின்று நிலவுவன.

தஞ்சை 'இராசராசேச்சரம்' அன்றி பிற கோயில்களையும் இராசராசசோழன் எடுப்பித்தான். மேல்பாடி கல்வெட்டால் சயங்கொண்ட சோழமண்டலத்தில் தேவதான இறையிலியாக நிலம்பெற்றுத் திருவரிஞ்சி யீச்சரம் எடுப்பித்ததாகவும், ஈழத்தில் மாதோட்டமான இராசராசபுரத்தில் உள்ள இராசராசேச்சரமும், பழையாற்றில் அருண்மொழி தேவேச்சரமும், திரு

வலஞ்சுழி ஆலயத்துள் கேத்திரபாலர்க்கு (1) ஒரு ஆலயமும் எடுத்ததாகவும் பிறவும் அறியக் கிடக்கின்றன.

இனி இராசராசனின்பட்டத்தரசி "உடையார் ஸ்ரீராசராச தேவர் நம்பிராட்டியார் தந்திசத்தி விடங்கியரான ஸ்ரீஓலோக மாதேவியார் வடகரை..........திருவையாற்றுப்பால் நாம் எடுப்பித்த திருக்கற்றளி 'ஓலோகமாதேவி ஈச்வரம்'" என்னும் கல்வெட்டுப் பகுதியால் திருவையாற்று ஐயாறப்பன் கோயிலின் வடபால், 'வடகைலாசம்' எனப்பெயரிய கோயிலைக் கட்டுவித்ததாகவும் தெரிகின்றது.

## திருவாளர். சர். மிர்சா. இசுமேல் அவர்கள்

(மைசூர் அரசின் திவான்)

சென்னைப் பல்கலைக்கழகப் பேரவையில் 5—8—38ல் நிகழ்த்திய பேருரையில்

## கல்விபற்றிய குறிப்புகள்:—

கடந்த முப்பது ஆண்டுகளில் இரும்பு, எஃகு, பருத்தி முதலிய தொழில்கள் நமது நாட்டில் மிகமிக விருத்தி அடைந்திருக்கின்றன. மின்சாரத்தொழில்களும் மதிக்கத்தக்க அளவு விரிந்து வருகின்றன. வாணிபமும், வங்கித்தொழிலும் விரைவில் பரவி வருகின்றன. அரசியல் துறைகளும் நாளடைவில் பெருகி, அவற்றிற்குரிய பணிகளும் ஒன்று பலவாகி வருகின்றன. என்றாலும் பல்கலைக்கழகங்களினின்றும் தேறி வருவோரின் தொகை மிகுதிக்கேற்றபடி பதவிகள் மிகாதபடியால், பட்டதாரிகள் பிழைக்கும்வழிகாணாது பரிதவிக்கின்றனர்.

இக்குறைபாட்டினைவிரைந்து அகற்றாதுவிட்டால் பல்கலைக்கழகங்களின் நலன்களும் நாட்டின் நலன்களும் கேடுறுமென்று அறிஞர்கள் நினைவில் இருத்தவேண்டும்.

(1) S. I. I. III i. p 23; Ins. 633 of 1902.

வேலையில்லாது தடுமாறும் படிப்பாளிகளைக்காண்போர், மேல்தரப்படிப்பை நாடுவோர்களின் எண்ணிக்கையை, கல்லூரிகளை மூடியோ, அவற்றில் நுழைவோரை மறுத்தோ, எவ்வாற்றானும் குறைக்கவேண்டுமென்கின்றனர். இது ஏற்றமுறையல்ல.

குடிமக்களில் பெரும்பாலார் தாங்கள் வதியும் இடங்களிலுள்ள தொழில்களில், தமக்குப் பயிற்சி இருந்தோ இல்லாமையோ நுழைந்துகொண்டு பிழைக்க வழிதேடிக்கொள்ளுகின்றனர். இற்றைநாளில் தொழில்முறைகள் மிகவும் மாற்றமடைந்து, சாஸ்திரீகமுறைகளில் பயிற்சிபெற்றவர்கட்கே இடந்தருவதாகி வருகின்றன. திறமையும், தொழிற்கல்வியும் தருவதற்கான தொழிற் கல்லூரிகளை ஆங்காங்கு அமைக்கவும், தொடக்கக்கல்வி, நடுத்தரக்கல்வி, உயர்தரக்கல்வி ஆகிய கல்விகளில் தேறிவரும் மாணவர்களை அவ்வப்போது அவரவர் திறமைக்கும் தகுதிக்கும் ஏற்றவண்ணம் தொழில்களில் பயிலவும், நுண்மாண் நுழை புலனுடைய கல்விமான்களைக் கலைவாணராக்குதற்கும் ஏற்ற முறைகள் அமைக்கவேண்டும். உயர்தரக் கல்லூரிகளில் தேறுவோர் அனைவரும் பல்கலைக்கழகப்படிப்பிற்குத் தகுதியுடையோரல்லர். அவர்களில் திறமையுடையோர்மட்டும் கலைக்கழகக் கல்வியை நாடுமாறும், நாட்டின் பொருளாதார வாழ்க்கைக்கு ஏற்ற தொழில்களில் பயிற்றுதற்கான கலைக்கூடங்களில் ஏனோர் பயிலுமாறும் திட்டம் செய்யவேண்டும்.

கல்வியில் தேறியவர்கள் வேண்டுவதினும் அதிகமாயிருப்பதாகக் கருதுவது தவறு. தொடக்கக் கல்வியிலும், நடுத்தரக் கல்வியிலும், கலைக் கல்வியிலும் தேறி முன்னுக்கு வரவேண்டிய மக்கள் மிகப்பலர் இருக்கின்றனர். இங்கிலாந்து தேசத்திலுள்ள பலதொழிற் கழகங்களைப் (Poly technics) பாருங்கள். இவற்றில் பயிலுவோரின் தொகை கலைக்கழகங்களில் பயிலுவோரைக் காட்டிலும் இருபதுமடங்கு அதிகமாயிருக்கின்றது.

பிழைக்கும் வழிகளைத் தேடுவதில் பல்கலைக் கழகத்தினர் பொறுப்பில்லை என நினைப்பதற்கில்லை. சமூக சேவையைச் செய்துவரும் பொது நிலையங்களின் பொறுப்புகள் கலைக்கழகங்களையும் சார்ந்திருக்கின்றன. சமூகநலனை நாடமாட்டாத கலைக் கழகங்களைக் குடிமக்கள் போற்றிவளர்ப்பது எற்றுக்கோ? அறிவின் எல்லையை அகற்றிவருவதும், விரிந்துவரும் அறிவின் வரம்புவரை கலைவாணர்களைக் குடியேற்றுவதும் பல்கலைக்கழகங்களின் முதற்கடமையாகும். அதனோடு அவற்றின் கடமைகள் முடிவடைவதில்லை. தம்மிடம் பயிலும் மாணவர்கள் உலகில் நுழையும்போது வாழ்க்கைக்கு ஏற்றவர்களாய் பயிற்றப்படுதலும் அவற்றின் இன்றியமையாத கடமையாகும். இதனால் தொழிலையே கற்பிக்க வேண்டுமென்பதல்ல. கல்விமுறையும் சிறப்பாக பல்கலைக்கழகமும், தம்மிடம் பயின்று வெளிச்செல்வோர் நாட்டிலுள்ள தொழில்களின் தேவைக்கு ஏற்றவர்களாய்த் தயாரிக்கப் படவேண்டும்.

இக்கருமத்தில் அரசியலாருக்கும் பெரிய பொறுப்பு இருந்து வருகிறது. நாட்டின் பொருளாதாரநிலை வளம்பெறுதற்கான விதிமுறைகளை வகுப்பதும், அவற்றை ஊக்கத்துடன் ஆட்சியில் கொணர்தலும் அரசியலாரின் கடமையாகும். இதற்கேற்ற அளவுதான் நாட்டில் தொழில்கள் பல்கும்; தொழில் வளர்ச்சிக்கு ஏற்றவாறு தொழில்களில் பணி செய்வோரும் பெருகுவர். நமது நாட்டில் வாணிகமும் தொழில்முயற்சிகளும் செழித்தோங்குதற்கான திட்டங்களை அரசியலார் கருதி அமைக்கவேண்டும். அப்பொழுதுதான் மக்கள் பிழைப்பதற்கான புதுத்துறைகளும் வழிகளும் ஏற்படும்.

பல்கலைக் கழகங்கள் மேற்கொள்ளவேண்டிய பெரும் பொறுப்பு மற்றொன்று இருக்கின்றது. அது மனிதரைக் கலைத் துறையிலும் தொழிற்றுறையிலும் பயிற்றுவதினும் மிகமிகச் சீரியது. கல்வியின்மாண்பு, நாட்டின்பற்று இவற்றிற்குத்தக மதிப்பிற்குரிய இந்தியர்களை ஆக்குதலாகும். இளைஞர்களை

யாவரும் மக்களூழியத்தில் நாட்டமுடையராதல்; குடிமக்களின் கடமைகளை நன்குணர்ந்தோராதல்; பரந்த உள்ளங்களினின்றும் பகை பொருமைகளை அகற்றிஞேராதல்; மக்கள் தமது நிலைத்த பிறப்புரிமைகளைப் பாதுகாத்துக் கோடற்பொருட்டுச் சரண் புகுந்து நிற்கவல்லகோட்டைகள் ஆதல் ஆதிய நோக்கங்களால் அணிபெறவேண்டும். பல்கலைக்கழகங்கள் உண்மையின் உறையுள்; உரிமையின் இல்லம் எனமதிக்கப்படல்வேண்டும். தங்கள் நலத்தையும், வாழ்க்கையையும் செழுமையுறச் செய்வதோடன்றி உலக வாழ்க்கையைச் சீர்மைபெறச் செய்வதே கலைவாணரின் குறிக்கோளாகவேண்டும்.

நீங்கள் நாட்டின் பொதுநலமே வாழ்க்கையின் குறிக்கோள் எனக்கருதி மக்கட் பகுதியினரிடத்துக் காணப்பெறும் ஒற்றுமை நயங்களையே பாராட்டுதல் வேண்டும். உங்கள் முன்னோர்கள் தத்தம் குலநலத்தை நாடியது போலல்லாது மன்பதையின் பரந்த நலங்களையே குறிப்பில் வைக்கவேண்டும்; சாதி, சமய வரம்புகளையெல்லாம் கடந்து குடிமக்களின் நன்மைகளைப்பேணி வளர்த்தற்குரிய பொது நோக்கில் கருத்தூன்ற வேண்டும். இத்தகைய சீரிய எண்ணங்களால் தூண்டப்பட்டும், அயராத நன்முயற்சியினுல் சாதி சமயப் பிணக்கங்களை அகற்றியும் இந்திய சமூகமெனும் ஒருமைப்பாடு நிலைபேறடைவதற்காவன புரியவேண்டும்.

இற்றைநாளில், மாகாண உரிமைகளும், சாதிஉரிமைகளும், மொழி உரிமைகளும் வெகுவாய் பேசப்படுகின்றன. இவற்ருல் நிகழ்ந்துவரும் பிளவுகளை ஒழிப்பதும், அமைதியும், சாந்தமும் நிறைந்த இந்தியாவை ஆக்குவதே கருமமெனுங் குறிக்கோளுடன் மக்கள் ஊழியத்தில் தலைப்படுதல்வேண்டும். இதுபோது அரசியல் உரிமைச்சோதனை இந்தியாவில் நடைபெறுகின்றது. இந்தியநாடு தன்னரசு பெறுவதானது, இன்று நிகழ்ந்துவரும் சோதனையின் வெற்றியைப் பொறுத்திருக்கின்றது. வெற்றியோ தலைமையிலிருந்து அரசியல் துறையில் குடிமக்களை நடத்துவோரைப்பற்றி இருக்கின்றது. தலைவர்கள் திறனுடையராய்

மட்டும் இருப்பது சாலாது. பழுதற்ற காட்சியுடையராதல் வேண்டும்; தீதொரீஇ நன்றின்பா லுய்க்கும் அறிவுடையாரா யிருத்தல் வேண்டும்; சீரிய ஒழுக்கமும் மக்கட்பண்பும் நிரம்பியவர்களாயிருத்தல் வேண்டும். இத்தகையினர் மிகப் பலர்கள் வாய்க்கவும் வேண்டும்.

நமது பல்கலைக் கழகங்கள் தலைமையான பட்டினங்களில் நிறுவப்பெற்றுள்ளன. சூழ்ந்துள்ள மக்களின் வாழ்க்கையில் தொடர்புகொள்ளாது, தனித்தே வாழ்கின்றன; குடிமக்களின் பொருளுதவியால் தாங்கள் வளம்பெறுவதைக் கருதுவதில்லை; குடிமக்கள் நலத்தின் பொருட்டே தாங்கள் தோன்றியிருப் பதையும் எண்ணுவதில்லை; அவர்களுடன் நெருங்கிய தொடர்பை ஆக்கிக்கொள்வதுமில்லை. மக்களாட்சியின் பெரு நோக்கானது கலை மாட்சியும் நாகரிகமும் பெறுவதானால், சுடர் விட்டொளிரும் கலைவிளக்கமாகிய ஒளிப்பிழம்பை பல்கலைக் கழகத்தினர் வளர்ப்பதும், குடிமக்கள் தத்தமக்கேற்ற தீ வர்த்திகளை அப்பேரொளிப்பிழம்பில் கொளுத்திக்கொள்ளு வதுமாகும்.

இக்கருத்து நிறைவேறுதற் பொருட்டு பல்கலைக்கழகத் தினர் வெளியிடத்தொண்டினையும், நூல் வெளியீட்டினையும் மேற்கொள்ளுதல் வேண்டும். மக்களின் வீட்டுவாசல்களுக்கே கல்வியையும், நாகரிகத்தையும் எளிதே கற்றுச் சுவைக்கக்கூடிய முறையில் கலைக்கழகத்தினர் கொண்டு செல்லவேண்டும். இது பேருரைகளாலும், நூல்களின் வாயிலாலும் கூடுவதாகும். இங்கிலாந்து தேசத்தில் இம்முறை கையாளப்படுவதால் வேலை யாட்களும் இக்கழகங்களின் பயனைப்பெரிதும் அடைகின்றனர். இந்தியக்கழகங்களும் வெளித்தொண்டுப் பிரிவுகளை நிறுவியிருக் கின்றனர். ஆனல் பெயரளவே இருப்பதன்றி, பணி சிறந்த தில்லை. ஒவ்வொரு கழகத்தின் நில எல்லைக்குள் பலவிடங் களிலும் இடையீடுபடாது தொடர்ந்து பேருரைகள் நிகழ்வதற் கான ஏற்பாடுகள் வேண்டும். இதனேடு அமையாது, புதுவ தான அறிவுப்பொருள்களை மக்கள் அறிந்துகொள்ளத்தக்கதான

எளியநடையில் ஒருபொருட் பாடங்கள் (monographs) எழுதி வெளியிடப்படவேண்டும். இங்கிலாந்து தேசத்தினர் நமக்கு நல்லவழியைக்காட்டியிருக்கின்றனர். கலைக்கழகப்படிப்பின் தரத்திற்குத் தகுதியான பாடபுத்தகங்கள் எளியநடையில் வெளியிடப்பெற்றிருக்கின்றன. இந்நூல்கள் யாவும் உண்மையில் கலைக்கழகத்தினரின் வெளித்தொண்டுப் பேருரைகளே. (Extension Lectures)

கலைக்கழகங்களின் வேலைகள் யாவும் அங்கிலமொழியில் நடைபெற்றுவருகின்றன. இன்னும் பல்லாண்டுகள் காறும் அங்கிலத்திற்றானே நடைபெற்றுவரும் என்பதும் மறுக்க வொண்ணாது. ஆதலால் கலைச்செல்வங்கள் எல்லாம் அங்கில மறிந்த ஒரு சிலருக்கே உரித்தாயிருக்கும். கலைக்கழகத்தினர் இக்குறைபாட்டை நீக்குதற்பொருட்டு வெளித்தொண்டுப் பேருரைகளை நாட்டுமொழிகளில் நிகழ்த்தவேண்டும்; அதனோடமையாது நாட்டுமொழிகளில் தங்கள் பேருரைகளை வெளியிடவும்வேண்டும். அப்பொழுது தான் கலைச்செல்வமே இல்லாதிருக்கும் நாட்டுமொழிகள் கலைமலிந்த மொழிகளாய்த் திகழ்ந்து வளனுறும்.

மற்றொருவகையிலும் பல்கலைக்கழகத்தினர் மக்களுடன் நெருங்கியதொடர்பைத் தேடிக்கொள்ளலாம்; பொருள்நூல் சமுதாயநூல், அரசியல்நூல் ஆகிய நுண்முடிபுகளை மக்கள் உணரச்செய்து ஆட்சியில் கொணரலாம். இலண்டன்நகரத்தைச் சார்ந்த சிற்றூர்களில் கலைக்கழகத்தினர் குடியேற்றங்கள் (Settlements) பலவற்றை ஆங்காங்கு நிறுவியிருக்கின்றனர். அயலிடங்களில் வதியும் ஏழைமக்களை நன்னிலைக்கு ஊக்குவதே இவற்றின் குறிக்கோளாகும். இவை கலங்கரை விளக்கங்கள். இருளடர்ந்த சுற்றுப்புறங்களில் நட்புநலன் சுகவாழ்வு ஆகிய இன்பக் கதிரொளிகளை விரிக்கும் நிலையங்களாய்த் திகழ்கின்றன. இத்தகைய வேலைகட்கு நமது நாட்டில் மிகமிக இடமிருக்கின்றது. நகர்ப்புறங்களிலும், நாட்டுப்புறங்களிலும் கலைக்கழகக் குடியேற்றங்களை நிறுவிப் பணிசெய்ய நம்மவர் விரைவில் முற்படவேண்டும்.

இறுதியாகக் கூறவிரும்புவது ஒன்றுண்டு. நீங்கள் அனை வரும் இன்பப்பேறு அடையுமாற்றில் பழகவேண்டும். உங்களால் முடிந்த அளவு நீங்கள் இன்ப வாழ்க்கையை எய்தவேண்டுவது உங்களுக்கும் உங்கள் அயலாருக்கும் நீங்கள் இயற்றவேண்டிய கடமை. இதன்பொருட்டுத்தன்னிலையை (Personality) ஆக்கிக் கொள்ளுதல் மிகவும் அவசியம். தன்னிலைமையும் இன்பநிலையும் பிரிக்க முடியாதபடி இணைந்திருக்கின்றன. ஒவ்வொரு மனித னிடமும் கண்டோரால் விரும்பப்படும் தன்மை உள்ளீடாய் மறைந்திருக்கின்றது. அதனை வளர்ப்பதற்கு நீண்டகாலமும் இடையறுமுயற்சியும் வேண்டியிருக்கின்றது. பிறரைக்கவர்ந்து, இன்புறுத்தும் குணங்களை வளர்த்துவரவேண்டும்; அவ் வண்ணமே பிறர் அருவருத்து வெறுக்கச்செய்யும் குணங்களை யும் நடைகளையும் அகற்றவேண்டும். இது வாழ்க்கைமுற்றும் முயன்று ஆக்கக்கூடிய செயல்; இதனை ஆக்கிக்கொள்ளும் முயற்சியிலேயே களிதுளும்பச்செய்வது இலவாகும். பிறரொடு கூடுங்கால் இனியனவேபேசுங்கள், இயற்றுங்கள். அவரிடத்துக் காணும் இனிய தன்மைகளையும், ஏற்கும் நலன்களையும் நோக் குங்கள்; வெறுக்கத்தக்கனவற்றையே நோக்குவதானால் வாழ்க் கையே கசந்துபோகும். நோக்கமுடியாத கோட்டங்கள் உங்கள் மனதில் இடம்பெற வேண்டாம். உங்கள் நலம்பெற்ற மன மானது பயனற்ற செயல்களில் செல்லவேண்டாம். மாசில்லாத தூயசிந்தனைகளில் உங்கள் மனம் பழகிவரவேண்டும். எல்லா நீதிகட்கும் பொறுமையே உரைகல் என்பதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். மனித முன்னேற்றத்தைத் தகைந்து, துன்பத்தில் ஆழ்த்துகின்ற கேடுகளை ஆராய்ந்தால் நடுநின்று ஆராயும் அறிவுநெறியையும், ஈந்துவக்கும் அறநெறியையும் பிழைத்தமையே போதரும். அறிவுச்சுடர் மங்காது காப்பதே உங்கள் சிறந்த கடமை.

# கச்சியப்பரும், கம்பரும்.

(கவிராஜபண்டிதர், ரா. திம்மப்ப ஐயர்.)

மணற்கேணியிடத்து நீர் தோண்டிய அளவிற்கேற்பச் சுரப்பெடுத்துப் பெருகுதல்போல, மாந்தர் தத்தங்கல்வி முயற்சிக்குத்தக அறிவு மீதூரப் பெறுவரென்பது அறிவுடையான்றோரது அனுபவசித்தமான வாய்மைமொழியாதலால், தெய்வீக வளம்படைத்த கவிஞர் பெருமக்களது செய்யுட்களை எம்முறையிலமைத்துப் பொருள்கொள்ளினும் அவ்வம்முறைக்கேற்ப அவை விரிந்து பொருடருமாகலின் அந்நயங்களை உலகுணர்ந் துய்வுபெறும் வண்ணம் ஈண்டு நம் செந்தமிழ்மொழிக்குச் சொந்தநாதனாகிய கந்தவேளது புராணமாகிய கந்தபுராணத்தில் அதனையியற்றிய தமிழ்ப்பெரும் புலவராகிய கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகள் அமைத்திருக்கும் அரும்பெருஞ் சிறப்புக்கள்வாய்ந்த கவிகள் மூலமாகக் கவிஞர் பெருமானாகிய கம்ப நாட்டாழ்வார் தம் கவியமைதிகளோடும் பிற புலவரது செய்புணயங்களோடும் ஒன்றவைத்து இக்கட்டுரை யெழுதுவோமாயினேம்.

சரவணப் பொய்கையானது முத்துக்களையும் தாமரை மலரினிதழ்களையும், அழகியபூந்தாதின் குழம்பையும் பரிமளத்தையுடைய அழகிய மலர்களிலுள்ள குளிர்ந்த தேனையும் மாறி மாறி அலைகளாகிய தனது கைகளால் ஒருசேர எடுத்து, மேன்மையையுடைய குமாரக் கடவுளது சீர்பாதங்களிலே இடையறாது பொருந்தும்படி செலுத்துதல், நீரையுடைய அழகிய அந்தப் பொய்கை, அக்கடவுளைப் பக்தியோடு பூசிக்கின்ற விதத்தையொக்கும் என்ற பொருளமையக் கந்தபுராணம் திருஅவதாரப் படலத்தில் கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகள்,

> 'ஆரமும் வனசத்தோடும் அணிமகரந்தச் சேறும்
> வேரியம் பூந்தண்டேனு முறைமுறை வீசிக்கையாற்
> சேரவே கொண்டுமேலோன் றிருவடி திளைப்பவுய்த்தல்
> வாரியந் தடாகமன்பால் வழிபடும் வண்ணம்போலும்'

என்ற அரிய கவினைய யமைத்துள்ளார்கள்.

சரவணப்பொய்கையைத் தொண்டனொருவனுக்குவமித்து, அதன்கணுள்ள முத்தையும் தாமரை யிதழ்களையும் அருச்சனைக்

குரிய பொருள்களாகவும், மகரந்தச் சேற்றையும் தேனையும் திருமஞ்சனத்துக்குரிய பொருள்களாகவும் அமையக் கவிஞர் குறித்துப் போனமை மிகப் பாராட்டத் தக்கதன்றோ?

இங்ஙனமே பெரிய புராணத்தில் சேக்கிழார் சுவாமிகள், பரிமள மிக்கு விளங்குகிற மலர்களோடு கூடிய திவ்விய தீர்த்தத்தைக்கொண்டு திருமஞ்சனஞ்செய்து சிவந்த பொன்மயமான நெடியகரைகடோறுமுள்ள எண்ணற்ற சிவாலயங்களிற்கோயில் கொண்டெழுந்தருளியுள்ள எம்பிரானாகிய பரமேசுரனை வணங்கி வழிபடுதலினாற் காவிரி நதியானது, அத்தேவாதி தேவனாகிய சிவபிரானுக்குத் திருப்பணி புரிகின்ற தொண்டர்களையு மொத்துத்தோன்றும் என்ற கருத்தமைத்து,

'வம்பு லாமலர் நீரால் வழிபட்டுச்
செம்பொன் வார்கரை யெண்ணில் சிவாலயத்
தெம்பி ரானை யிறைஞ்சலி னீர்ம்பொன்னி,
யும்பர் நாயகர்க் கன்பரு மொக்குமால்'

என்று அழகாகக் காவிரி நதியைக் குறித்து வருணித்திருக்கின்றனர்.

இனி, இராமலட்சுமணர்கள் சீதாபிராட்டியுடன் கோதாவரி நதிதீரத்தில் உலவச் சென்றகாலை அந்நதியெங்ஙனிருந்ததென்பதைக் கவியரசராகிய கம்பநாடர் புனைந்துரைத்த வகையைக் காண்போம்.

'வண்டுறை கமலச் செவ்வி
வாண்முகம் பொலிய வாசம்
உண்டுறை குவளை யொண்கண்
ஒருங்குற நோக்கி யூழின்
றெண்டிரைக் கரத்தின் வாரித்
திருமலர் தூவிச் செல்வர்க்
கண்டடி பணிவ தென்னப்
பொலிந்தது கடவுள் யாறு'

என்ற பாசுரத்தால் நம் கவிவேந்தர் கோதாவரியின் செய்கையைக் கூறுவான்றொடங்கி, அத்தெய்வநதியானது வண்டுகள் நீங்காதுறைகின்ற தாமரை மலர்களாகிய அழகிய ஒளிபொருந்திய முகங்கள் விளங்க அவற்றிடையே மலர்ந்துள்ள பரிமள மிக்குள்ள குவளைகளாகிய பிரகாசம் பொருந்திய கண்களால் முறையே அவ்வெம்பெருமக்களை ஒருசேரத்தரிசித்து, தெள்ளிய அலைகளாகிய கைகளால் மேன்மையாகிய மலர்களை மிகுதி

யாகக் கொண்டருச்சித்துச் செல்வர்களாகிய அப்பெரியார்களைக் கண்படைத்ததன் பயனாகக் கண்குளிரக்கண்டு திருவடிகளிற் பணிவதுபோல மிளிர்ந்து காணப்பட்டது என்று திறம்படக் கிளந்துபோயினர்.

இனி, இக்கவியிலமைந்துள்ள அரும்பெருஞ்சிறப்புக்களைச் சிறிது குறித்திடுவாம்.

முழுதும் வற்றாது, மிக்ககோடையினும் நன்றியங்கியோடு தலை ஜீவநதிக்குள்ளமாண்பாகலின் சப்த தீர்த்தங்களுள் ஒன்றாகிய கோதாவரியைக் 'கடவுள்யாறு' என்றார். மூல மூர்த்தியின் அம்ச விசேடம் வாய்ந்த கடவுட்டன்மை கொண்ட இராமலட்சுமணரைப் பூசித்தற்கேற்ற கடவுட்பான்மை இந் நதிக்குளவாகலின் இங்ஙனங் கூறினர் எனினுமாம். கடவுட் கடுத்தபடியாக நிற்பது மேகரூபத்தின் காரியமாகிய நீரேயாத லாலும், இவ்வுண்மையையுணர்த்தவே 'வான்சிறப்பு' என்னு மதிகாரத்தைத் திருவள்ளுவர்தம் குறளில் 'கடவுள் வாழ்த்து' என்னும் முதலதிகாரத்தின்பின் அமைத்தனராதலானும், நீர் மயமாகிய இந்நதியைக்கடவுட்டன்மை பொருந்தியநதி என் னும்பொருள் போதர இங்ஙனங் கூறினரெனினுமிழுக்காகா தென்க.

*'வண்டுறைகமலம்' எனவே தேன்பெருக்கறாத நாண் மலர்த்தாமரை என்பது பெறப்படும். வண்டுகள் தாம் உணவு வேண்டிப்பிரிந்து சென்று ஏறியும் இழிந்தும் சுழன்றும் மெய் வருந்தாது போதிய அளவு உணவைத்தாம் முதற்கண் சென்று மொய்த்தற்கிடமான ஒருதாமரையே தருதலின் 'வண்டுறை கமலம்' என 'உறை' யென்னு நிலைச்சொற் கொடுத்துக்கூறி னார். 'சுரும்புணக்கிடந்த நறும்பூஞ் சேக்கை' என்றசிலப்பதி காரத் தொடர்க்கு உரையாசிரியராகிய அடியார்க்கு நல்லார் இவ்வாறே பொருள் குறித்துள்ளார். விருந்தினராகிய இராம லட்சுமணரைக்கண்ட புது மகிழ்ச்சியால் முகமலர்ச்சியுற்றமை விளங்கச் 'செவ்விவாண்முகம் பொலிய' என்றார். முகத் துக்குத்தாமரையையும், கண்கட்குக் குவளையையும் உவமை குறித்துப் போதல் கவிஞர்க்குரிய மரபாகலின், கரையோரங்

*'வண்டுறைக்கமலம்' என்றும் ஓர் பாடமுண்டு. வளவியதுறை கடோறுமுள்ள தாமரை யென்பது அதற்குப் பொருள். இயல்பான பாடமாகிய 'வண்டுறைகமலம்' என்ற தொடர்க்கு விசேடப்பொருளிருத் தலின், அப்பாடமே சிறப்புடைத்து.

களில் தாமரைமலர்களினிடையிடையே மலர்ந்து விளங்கிய குவளைகளை மலர்ந்த முகத்திடையே விளங்கும் கண்களாக உருவகப்படுத்தினர்.

சக்கரவர்த்தித்திருமக்களது திருத்தோளிலோ, தாளிலோ கரத்திலோ, உரத்திலோ ஏதேனுமொன்றி லீடுபட்ட கண்கள் அவ்வவ்வுறுப்புக்களிலேயே வீழ்ந்து கிடப்பதன்றிப் பிறிதோர் அவயவத்தைக் காணுமாறு மீள இசையாதாகலான் 'ஒருங்குற நோக்கி' என்றார்.

'தோள்கண்டார் தோளேகண்டார்; தொடுகழற் கமலமன்ன
தாள்கண்டார் தாளேகண்டார்; தடக்கை கண்டாருமஃதே;
வாள்கொண்ட கண்ணார்யாரே வடிவினை முடியக்கண்டார்
ஊழ்கொண்ட சமயத்தன்னா னுருவுகண்டாரை யொத்தார்'

என்ற பாசுரம், ஈண்டு நோக்கற் பாலதாம்.

பெருமானையும் பிராட்டியையும், இளைய பெருமாளையும் ஒருங்கே நோக்கியென்பதூஉம், கண்மிச்சில் படும்படிநோக்கி என்பதூஉம், சுவர்ணகிரீடமும், பீதாம்பரமும், கனகபூஷணமு மின்றித் தவவேடம் பூண்டவிஃதென்கொலோவென ஐயுற்று நோக்கி யென்பதூஉம் தோன்ற, 'ஒருங்குற நோக்கி' என்றார் என இதற்குப் பதசாரங் காணலும் பொருந்தும்.

'ஊழின்' என்ற சொல்லைப் 'பணிவது'

என்றதனோடியைத்து, அந்நி முறைப்படி முதற்கண் இராமனை யும், பின் பிராட்டியையும், அதன் பின்னர் இலக்குவனையும் வணங்கிற்றெனப் பொருள் கொள்ளுதல் ஒன்று. அன்றி, ஆசாரியனாகிய சுமித்திரை சிங்கத்தை முதலில் வணங்கிப் பின் புருஷகாரத்தையுடைய பிராட்டியைப் பணிந்து, அவளது திரு வருளால் இராமபிரானை யிறைஞ்சிற்றெனப் பொருள் காணலு மீங்குச் சிறந்து நிற்கும்; இவ்வாறுரைப்பது வைஷ்ணவ சம்பிர தாயத்தைச் சார்ந்ததாகும். இங்ஙனமே சம்பிரதாயப்பொருள் களைக் கம்பநாடர் ஆங்காங்குத் தமது காதையிற் குறிப்பாகவும் வெளிப்படையாகவும் அமைத்துள்ளார்.

'செய்ய வளைக்குரு வின்னரு ளாற்றிருத் தாள்வணங்கிச்
செய்ய வளைக்குலஞ் சூழரங் கேசன் சிறிதமுது
செய்ய வளைக்கும் புவிக்குமங் காந்தசெவ் வாய்முகுந்தன்
செய்ய வளைக்குஞ் சிலம்பணி பாதங்கள் சேர்ந்தனமே'

என்ற திருவரங்கத்தந்தாதிப் பாசுரத்தால் இச்சம்பிரதாயப் பொருளை நன்கறியலாம்.

எம்பெருமானுடைய திருவடி நிலை கிடைத்தற்கு முதலில் ஆசிரியரது உபதேசமும், பின்னர் தன்மூலமாகப் பிராட்டியினது திருவருள் விசேடமும் வேண்டப்பெறும். இக்காரணத்தால் தான் திருமகள் 'புருஷாகாரபூதை' எனச் சிறப்பித்துக் கூறப் படுஞ்சீர்த்தியைப் பெற்றுளென்க. இக்கருத்துக்கேற்ப, இளைய பெருமாளை யிங்குக் குருவாகவும், சீதையைத் திருமகளாகவும், இராமனை யெம்பெருமானாகவும் கருதிக் கொள்க.

இராமபிரானை மூலப்பொருளென்றுதல், மூதறிவுற்றமுனி யென்றுதல், அரசிளஞ்சிங்கம் என்றுதல் மனத்திற்கொண்டு அவனையும் உடனிருப்பவரையும் அவரவர்க்குத்தக மனமொழி களால் வணங்கிற்றெனத் தாற்பரியமுரைத்தலும் பொருந்தும். 'தெண்டிரைக்கரத்தின்வாரித்திருமலர்தூவி' என்றதால் 'காயத்தொண்டும்', இயல்பிலேயே குளிர்ந்திருத்தலால் தண் ணளி புரிதற்குரிய 'மனத்தொண்டும்' அலைகளினொலிவாரத்தால், துதிபுரிதலாகிய 'வாக்குத் தொண்டும்' இங்ஙனம் திருக்கைத் திருந் தனவெனத் திரிகரண பூர்வகமான திருப்பணியின் பான்மை களை நிரலே யீண்டமைத்துக்கொள்க.

முக்கனிச்சுவையினும், வெல்லக்கட்டியாதற்குரிய பசிய தீங்கரும்பினும், பனிமலர்க்குழற்பாவை நல்லாரினும், தனி முடி கவித்தாளும் அரசினும், தொண்டர்க்கினியவனாக இருப்ப வன் தனிப்பரஞ் சுடராகிய சிவபெருமானேயாவன் என்ற கருத்துப்போதரக்,

'கனியினுங்கட்டி பட்டகரும்பினும்
மனிமலர்க்குழற் பாவைநல்லாரினுந்
தனிமுடிகவித்தாளு மரசினு
மினியன் றன்னடைந்தார்க்கிடை மருதனே'

என்றதேவாரத்தைத் திருநாவுக்கரசு மூர்த்திகள் அருளிச் செய்திருப்பதால், மாந்தராயினார்க்குப் பேரரசுபுரிதலாகிய பதவியைக்காட்டிலும் இப்பாரகத்தே பெரியதாகிய நிலையொன் றில்லை யென்பது பெறப்படும். அப்பதவியையும் ஓர் பொருட் டாகக்கருதாது மிக எளிதில் பிறர்க் கீபவரே பெருவள்ளற்கோ மான்களாகவும், செல்வப்பெருந்தகையாளராகவுங் கருதப் படுவர். ஈண்டுச்,

'செல்வத்துப் பயனேயீதல்
துய்ப்பே மெனினே தப்புந பலவே'

என்ற புறப்பாட்டடிகள் கூர்ந்து நோக்கற்பாலன,

'எனதென தென்றிருக்கும் ஏழை பொருளை
யெனதென தென்றிருப்பன் யானும்—தனதாயிற்
றானும் அதனை வழங்கான் பயன்றுவ்வான்
யானு மதனை யது'

என்ற நாலடியார்ச் செய்யுள் 'செல்வ' னெனப்படுதற் குரியான் இன்னனென்பதை நன்கு வலியுறுத்திநிற்றலீண்டுக் கவனிக்கற்பாற்று.

தமிழர் நெறியைப் பின்பற்றித் தமிழ் வழக்கங்களையும் மரபுகளையும் ஆங்காங்குத் தமது நூலகத்துக் குறித்துப் போகுங் கம்பநாடர், ஈங்கு இராமலக்குவரைச் 'செல்வ' ரென்ற பெயராற் குறித்திருப்பதன் நயமென்னையோ வெனிற்கூறுதும்.

நாடும், நாட்டைச் சார்ந்த இடமாகிய மருதத்தின் (அயோத்தி) உரிமையைப்பரதனுக்கும், காடும், காட்டைச் சார்ந்த இடமாகியமுல்லை நிலத்துரிமையை முனிவருக்கும், மலையும், மலையைச்சார்ந்த இடமாகிய குறிஞ்சிப்புலத்தினுரிமையைச் சுக்கிரீவனுக்கும், கடலும், கடலைச்சார்ந்த இடமாகிய நெய்தலகத்தின் உரிமையை விபீஷணனுக்கும் வழங்கித் தானொரு சிறிதும் அரசியலை விரும்பாது பின்னர் அயோத்தி நாட்டாரது வேண்டுகோட்படி அரிதிலேற்று அரசியற் பொறையை வகித்தவள்ளலெனப்படுதற்குரிய கோமான் இராமனுதலால், ஏனையிருவரையும் உட்படுத்தி, ஈண்டு நம் கவிச்சக்கரவர்த்தியார் 'செல்வர்' என்றவரைக் குறிப்பாராயினர் என்க.

இவ்வாறு பொருள்வளம் பொங்கித்ததும்பும் காரணத்தால் தான் இக்கவி வள்ளலது பாசுரங்கள் 'கம்பசூத்ரம்' என்றற்கிலக்காகி விளங்கி மிளிர்கின்றன.

தமிழ்வழியால் தமிழ் மொழியி லிராமகாதையைப் பாட வந்த கம்பர், தமிழ் நெறி வழக்கங்களாங்காங்குப் பொருந்த உரைத்துப் போதல் மிகப்பாராட்டற் பாலதாம்.

## ஜைன சமயத்தவரால் செய்யப்பட்ட

# யசோதர காவியம்—புத்துரை

திரு. வே. மு. ஸ்ரீநிவாஸ முதலியார் அவர்கள்
காஞ்சிபுரம்

(முற்றொடர்ச்சி துணர் 14, மலர் 4, பக்கம் 138)

34. அல்லது மன்னை நின்னோ டியானுமுன் னநேக வாரந்
தொல்வினை துரப்ப வோடி விலங்கிடைச் சுழன்றபோழ்து
நல்லுயிர் நமர்கடாமே நலிந்திட விறந்த தெல்லா
மல்லன்மா தவனின் யாமே மறித்துணர்ந் தனமு மன்றோ.

பொருள் :—அன்னை அல்லதும் தொல்வினை நல் உயிர் துரப்ப நின்னோடு யானும் முன் அநேக வாரம் ஓடி விலங்கிடை சுழன்றபோது நமர்கள் தாம் ஏ நலிந்திட இறந்தது எல்லாம் மல்லல் மாதவனின் யாம் ஏ மறித்து உணர்ந்தனம் உம் அன்றோ.

பொழிப்புரை :—தங்கையே! அன்றியும், நம் பண்டைய தீய வினைகள், நம் நல்ல உயிரைச் செலுத்த அதனால் உன்னுடனே யானும் முற்பிறப்புக்களில் பலமுறை சென்று விலங்கு கதியில் பிறந்து திரிந்தகாலங்களில் நம் சுற்றத்தினர்களாலே நோய் செய்யப்பட்டு, நாம் இறந்த பிறப்புக்களை எல்லாம் மிக்க பெருமை பொருந்திய சுதத்த முனிவரால் சொல்லப் பட்டு நாம் இப்பிறப்பில் உணர்ந்தனம் அன்றோ என்று கூறினன் அபயருசி.

குறிப்புரை :—அன்னை—அபயமதி; தங்கை. அநேகம்-பல. வாரம்—முறை. துரப்ப—செலுத்த. விலங்கிடை—விலங்கு கதியில். நமர்கள்—நம்சுற்றத்தினர்கள். தாமே—அசை. நலிந்திட—நோய் செய்யப்பட்டு. இறந்தது எல்லாம்—இறந்த பிறப்புக்களை எல்லாம். மாதவன்—சுதத்த முனிவர். மறித்து-இப்பிறப்பில். ஏ. உம்—அசைசள்.

சிறப்புரை :—“ ஊழ்வினை துரப்ப ஓடி ” (சீவகசிந்—2763.) “ சூழ்வினைதுரப்பச் சென்று ” (சூளா—இரத—81.) (௩௪)

35. கறங்கெனவினையி னோடிக் கதியொரு நான்கி னுள்ளும்
பிறந்தநாம் [1]பிறவி தோறும் பேற்றன பேசலாகா
விறந்தன விறந்து போகவெய்துவ [2]வேய்தின் பின்னும்
பிறந்திடவிறந்த தெல்லா மிதுவுமவ் வியல்பிற் றேயாம்.

முன்பாடம் :—[1]பெற்ற பேற்ற பிறவிகள். [2]வேய்திப்.

பொருள்:—“ வினையின் ஓடிகறங்கு எனகதி ஒரு நான்கின் உள்ளும்,” எனவும், “ இறந்தது எல்லாம் பிறந்திட ” எனவும், மொழிமாற்றுக.

பொழிப்புரை :—தீவினையினால் தூரத்தப்பட்டு விரைந்து சென்று, காற்றாடிபோல மாறிமாறித் தேவர், மக்கள், விலங்கு, நரகர் ஆகிய நான்கு கதிகளிலும் பிறந்த நாம், அப்பிறப்புக் களில் எல்லாம் அனுபவித்த துன்பங்களின் அளவைச் சொல்லி முடியாது. முன் பிறப்புக்களில் நம்மால் அனுபவித்துக் கழிக் கப்பட்ட வினைகள் போக, மேலும் அனுபவிக்கத்தக்க எஞ்சிய வினைகள் நம்மை அடையின், நாம், முன்பிறந்து இறந்து கழிக் கப்பட்ட கதிகளில் எல்லாம் பின்னும் பிறத்தற்கே யாகும். இன்று நமக்கு நிகழாநின்ற இந்நிகழ்ச்சியும், நாம் முற்பிறப்புக் களில் பிறந்து இறந்த இயல்பினதேயாம் என்று கூறினான் அபயருசி.

குறிப்புரை :—கறங்கு—காற்றாடி. (சீவகசிந், 447.) என- உவம உருபு. ஒரு—ஏ—அசைகள்.

சிறப்புரை :—“ கறங்கின் உழலும் சாதி தோறும் துன்பம் ” (திருக்க—76) “ வினைக் காற்றினால் கதிநான்கின் சுழலுமே ” மேருமந்—71.)

(௩௫க)

36\. பிறந்தநாம் பிறவி தோறும் பெறுமுடம் பவைகள் பேணுத் துறந்தறம் புணரி னம்மைத் தொடர்ந்தன வல்ல தோகாய் சிறந்ததை யிதுவென் றெண்ணிச் செம்மையே [1]செய்யாதாலே யிறந்தன மிறந்த காலத் தெண்ணிறந் [3]தனக ளெல்லாம்.

முன்பாடம் :—[1]செய்யத் தாமே. [2]தனர்க.

பொருள் :—தோகாய் நாம் பிறந்த பிறவி தோறும் பெறும் உடம்பு அவைகள் பேணு துறந்து அறம் புணரின் நம்மை தொடர்ந்தன அல்ல இது சிறந்ததை என்று எண்ணி செம்மை யே செய்யா தால் ஏ இறந்த காலத்து எண் இறந்தனகள் எல்லாம் இறந்தனம்.

பொழிப்புரை:—தங்கையே ! நாம் முன்பிறந்த பிறப்புக்கள் தோறும் பெற்ற உடம்புகளைப் பாதுகாவாது இல்வாழ்க்கை யின் நீங்கி, ஸ்ரீ ஜினதருமத்தைப் பாதுகாத்திருப்பின், இத் துன்பங்கள் நம்மைத் தொடரும் வன்மை உடையன அல்ல.

நாம் இறந்த காலத்தில் ஸ்ரீ ஜினதருமம் சிறந்தது என்று எண்ணித் துறவறத்தை மேற்கொண்டு ஒழுகாமையால், பல வகைப் பிறப்புக்களில் எல்லாம் பிறந்து இறந்தனம் என்று கூறினன் அபயருசி.

குறிப்புரை—தோகாய்—விளி; தங்கை; அபயமதி. பெறும் உடம்பு—பெற்ற உடம்பு. பேணு—பாதுகாவாது. துறந்து—இல்வாழ்க்கையின் நீங்கி, அறம் புணரின்—ஸ்ரீஜின தருமத்தைப் பாதுகாத்து இருப்பின். தொடர்ந்தன அல்ல—தொடரும் வன்மை உடையன அல்ல. இது—ஸ்ரீஜினதருமம், சிறந்ததை—ஈறு திரிந்த குற்றுகரச்சொல்; சிறந்தது. செம்மை—வஞ்சனை இல்லாத உண்மைத் துறவு (மேருமந்—964.) ஏ—அசை. ஏ. தேற்றம். எண் இறந்தனகள்—பலவகைப் பிறப்புக்கள்.

சிறப்புரை :—இறந்தனம் இறந்தகாலத்து எண்ணிறந்தன கள் :—“ கடல்களும் மலையுங்கானும் வானமுங் கடல்கள் சூழ்ந்த, திடர்களுங் கயமு மாறும் நாளிகைப் புறவுந் தீராப், படுதுயர் நரக மேழும் நிகோதமும் பதேச முன்னர், உடல் கிடந்தழிந்திடாத விட மில்லை யுணரின் என்றான்.” (மேருமந்—110) “பவங்கள் தோறும், மருவிநாம் மகிழ்ந்து சென்ற பிறப்புமற்றதனுக் கப்பா, லொருவரா லுரைக்கலாகா வுலந்தன பிறவி மேனாள்” (மேருமந்—1007) “அறம்புணரின் நின்ற தீக்கதி நீங்கும்” (மேருமந்—473.) (௩௰௨.)

### நரக கதியின் அழிவு.

37. முழமொரு மூன்றிற் றொட்டு மூரிவெஞ் சிலைக [1]ளைஞ்ஞூ
றெழுமுறை பெருகி மேன்மே லெய்திய வுருவ மெல்லா
மழலினுண் மூழ்கி யன்ன வருநவை நரகந் தன்னு
ளுழைவிழி நம்மோ டொன்றி யொருவின வுணரலாமோ.

முன்பாடம் :—[1]ளைஞ்ஞூற்.

பொருள் :—உழைவிழி அழலின் உள்மூழ்கி அன்ன அருநவை நரகம் தன்னுள் ஒரு மூன்று முழம் இன் தொட்டு மூரி வெஞ்சிலைகள் ஐஞ்ஞூற்று எழுமுறை மேல்மேல் பெருகிஎய்திய உருவம் எல்லாம் நம் ஓடு ஒன்றி ஒருவின உணரல் ஆமோ.

பொழிப்புரை :— தங்கையே! முற்பிறப்புக்களில் தீயில் குளித்தாற் போன்ற பொறுத்தற்கரிய துன்பத்தை உடைய நரகங்களில் மூன்று முழம் முதலாக, வலிய வெவ்விய விற்கள்

ஐந்நூற்றின் நீண்ட அளவு ஈருக, அவ்வளவின் இடையே, முறையே படிப்படியாய் நரகங்களின் புரைகட்கு ஏற்றவாறு வளர்தல் உற்ற பலவகை உருவங்களை எல்லாம்பெற்று, நம் முடன் கூடித் துன்பத்தினை அனுபவித்துப் பின் வேறு கதிகளில் பிறத்தற்குப் பிரிந்து சென்ற உயிர்களின் அளவினை அளவிட்டு அறியலாமோ என்று கூறினுன் அபயருசி.

குறிப்புரை :—உழைவிழி-விளி; அபயமதி; தங்கை. அரு நவை-பொறுத்தற்கரிய துன்பம். ஒன்றி-கூடி. ஒருவின-பிரிந்த. உணரல்-அறியல். தொட்டு-முதலாக. மூரி-வலிய. வெம்-வெவ் விய. சிலைகள்-விற்கள். எழு-நீண்ட. (எழுமுறை-வினைத் தொகை) மேன்மேல்-படிப்படியாய். பெருகிஎய்திய-வளர்தல் உற்ற. ஒரு-அசை. இன்-சாரியை.

சிறப்புரை :—நரகர்கள், முதல் நரகத்தின் முதல்புரையில் மூன்று முழம் அளவு உயரத்தினையும், அம்முதல் நரகத்தின் பதின்மூன்றும் புரையில் ஏழே முக்காலே வீசம் வில், அளவு உயரத்தினையும் உடையவராய் இருப்பர். என்பது சமண் சமய நூல் வழக்கு "முழம் மூன்று உயர்வாய் முதலாம் புரையின்" (மேருமங். 939.) அவ்வழக்கினுக்கு ஏற்றவாறு ஒன்று முதல் ஏழாம் நரகம் வரையில் முற்பிறப்புக்களில் அவர்கள்பெற்ற உடம்புகளின் அளவுகளையும், துன்பங்களையும் இந்நூலாசிரியர் தொகுத்துக் கூறினர் என்க.

முதல் நரகத்தின் ஈற்று அளவாகிய ஏழேமுக்காலே வீசத் தினை முறையே இரண்டால் ஆறு முறை பெருக்கிய அளவு ஏனை ஆறு நரகங்களின் (இரண்டு முதல் ஏழுவரை) நரகர்களின் உயர்ந்த அளவு என்பர். (மேருமங்-941.) அதாவது இரண் டாம் நரகத்தின் நரகர்கள், (எஆபஅ × 2 = 0௫௭ஹ) பதினைந் தரையே அரைக்கால் வில்லின் அளவினர். மூன்றும் நகரத்தின் நரகர்கள், (௰௫௭ஹ × 2 = ௩0கவ) முப்பத்தொன்றேகால் வில் லின் அளவினர் (மேருமங்-521.) நாலாம் நரகத்தின் நரகர்கள் (௩0கவ × 2 = ௬0உ௭) அறுபத்திரண்டரை வில்லின் அளவினர் (மேருமங்-746.) ஐந்தாம் நரகத்தின் நரகர்கள், (௬0உ௭ × உ = ாஉ0௫) நூற்றிருபத்து ஐந்து வில்லின் அளவினர். ஆறும் நரகத்தின் நரகர்கள், (ாஉ0௫ × 2 = உாரு0) இருநூற்றைம்பது வில்லின் அளவினர். ஏழாம் நரகத்தின் நரகர்கள், (உாருo × 2 = ௫ா) ஐந்நூறு வில்லின் அளவினர் (மேருமங்-889) என்பர்.

(தொடரும்.)

# புத்தக மதிப்புரை.

**ஐங்குறுநூறு:—மருதம் :—**எட்டுத்தொகையென்பது புலவர்கள் போற்றும் தமிழ்த் தீஞ்சுவை ததும்பும் நூல்களுள் ஒன்று. இந்நூலிற்காணும் பாடல்கள் பெரும்பாலனவற்றின் உள்ளுறை உவமம், இறைச்சிப்பொருள் ஆகிய பகுதிகளைச் செவ்வனம் விளக்கிச் சென்ற பழையவுரை ஒன்று உண்டு. என்றாலும் அகல உரை இல்லாதது பெருங்குறையாயிருந்துவந்தது.

இதுபோது வெளியிடப்பெற்றிருப்பது இந்நூலின் மருதப் பகுதியும், திருவாளர், வித்துவான் ஔவை. சு. துரைசாமி பிள்ளை அவர்கள் எழுதிய அகல உரையுமாகும். திருவாளர், துரைசாமிபிள்ளை அவர்களின் தமிழ்ப்புலமையும், இலக்கண, இலக்கிய நூல்கள், சமய, சாத்திர நூல்கள் முதலியவற்றின் நுணுகிய ஆராய்ச்சியும், ஆங்கிலநூற் பயிற்சியும், இடையறாத் தமிழ்த்தொண்டின் சிறப்பும், உரைகாணுந் திறனும் தமிழ்நாடு நன்குணரும். இவர்கள் எழுதிவரும் உரைநூல்களைப் படிப்போர் பழைய உரையாசிரியர்களின் வளம்பெற்ற உரைகளைப் படிப்பதாகவே எண்ணுகின்றனர்.

இவ்வுரையாசிரியர் பல்லாண்டுகளாய் உயர்தரப் பள்ளிகளில் தமிழாசிரியராயிருந்து மாணவர்களின் தமிழார்வம்பெருகுமாறு செய்துவரும் அருந்தொண்டின் பயன் இந்த நூலுருவம் கொண்டதெனத் தெரிகின்றது. இவ்வாசிரியரிடம் பாடங் கேட்டுப் பயன் அடைந்த நன்மாணக்கர்கள் இவ்வரிய உரை நூலின் அருமைகளைத் தமிழ்கூறு நல்லுலகு முற்றுமே துய்த்தற்பாலதெனும் பரந்த நோக்குடன் இதனை வெளியிடத் துணிந்தனர். பல்கலைக்கழகங்களும், மடத்தின் அதிபர்களும், பெருஞ்செல்வர்களும், நூலின் தகுதியறிந்து உதவிசெய்ய முற்படுவதில்லை ; இவர்களிடமிருந்து ஒரோவழி உதவி பெறுவோரிற் பெரும்பாலர் தமது செல்வாக்கு மிகுதியால் பயன்கொள்கின்றனர். இதனை உணர்ந்துவைத்த திருவத்திபுரம் ஔவைத்தமிழ் மாணவர் கழகத்தினர் இவ்வரும் பணியை மேற்கொண்டு, பெரும் பொருட்செலவில் பதிப்பித்துப் பெருமைமிக்க இந்நூலை உலகினுக்கு உதவியது செயற்கரிய நற்செயலாகும். தமிழ்

வளர்ச்சியில் கருத்துடைய நன்மக்களும், கல்விக் கழகங்களும் ஒவ்வொரு பிரதியேனும் விலைகொடுத்து வாங்கி இந்நூலின் எஞ்சிய நான்கு பகுதிகளையும் வெளியிடுமாறு ஆசிரியரையும் கழகத்தினரையும் ஊக்குதல் கடமையாகும்.

இந்நூலின் விலை ரூபா 1—4—0

**வெள்ளிவிழா நூல்நிலைய அட்டவணை :—** இந்த நூல் நிலையமானது மேலைத்தஞ்சை சில்லாபோர்டு தலைவர் திரு. V. நாடிமுத்துப் பிள்ளையவர்களின் நன்முயற்சியால் தொடங்கப்பெற்று சில ஆண்டுகளாய் ஊர்ப்புறங்களின் சீரமைப்பு வேலைக்கு ஏற்ற கருவியாய் இருந்துவருகின்றது. இதுபோது வெளியிடப் பெற்றிருக்கும் நூலட்டவணையானது நூல்நிலையத்தையும், அதிற் பெறலாகும் நூல்களையும் கற்போருக்கு விளம்பரப்படுத்துதற்கு ஏற்ற கருவியாயிருக்கும். அட்டவணை ஆங்கிலம், தமிழ் எனும் பெரும்பிரிவுகளாகவும், நூல்களை வகைப்படுத்திய உட்பிரிவுகளாகவும் நூலாசிரியர், வெளியிடுவோர் முதலிய குறிப்புகளுடனும் அமைந்திருப்பது குறிப்பில் வைக்கவேண்டிய செய்திகளாகும். ஆங்கில நூல்கள் 417 நிலையத்தில் இருக்கின்றன. இவற்றில் பெரும்பாலன ஊர்ப்புறங்களில் வதிபவர்க்குப் பயன்படுவன அல்ல. தமிழ்நூல்கள் 1265 இருக்கின்றன. நல்லறிவுச் சுடர் கொளுத்தி நாட்டுமக்களை அறியாமை, வறுமை, நோயாதிய வற்றிலிருந்தும் விடுவித்து நலஞ்சிறந்தவராதற்குரிய வழிதுறைகளைக் காட்ட முற்படும் நூல் நிலையத்தே இழிதகவான செயல் இச்சைகளிற் கொண்டுய்க்கவல்ல பழி மிகுந்த நூல்கள் பலவற்றைத் தொகுத்திருப்பது குறிக்கோளுக்கு ஏலாத செயல் என்பது குறிக்கற்பாலது.

நூல்நிலையம் நிறுவியதும், கலைச்சுவை பரவுதற்கான வழிதுறைகளை அமைப்பதும், நூலட்டவணை வெளியிடுவதும் தமிழ்நாடு போற்றுதற்கான நற்செயல்களாம். நூற்பட்டியில் இடம்பெறுதற்கான சிறந்த தமிழ் நூல்கள் மிகப்பல இருக்கின்றனவென்பதைக் கருத்திலிருத்திக் காலப்போக்கில் குறைகள் அகற்றப்படுமெனை எண்ணுகின்றோம்.